# செந்தமிழ்

தொகுதி—74 மார்ச் பகுதி 1

1980

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

ஆசிரியர் :
டி. பீ. எம். பெரியசுவாமி

# ஆசிரியர் பக்கம்

தமிழ்ப் புலவர் பெருமக்களின் பற்றும் பாசமும் செந்தமிழ் இதழின் உயிரும் உடம்புமாய் இலங்கி வருகிறது. காலாண்டு இதழாய் நடந்து வரும் நிலையினை மாற்றி, திங்கள் தோறும் விரைந்து வரச் செய்ய வேண்டும் என்ற எமது விழைவினைப் பலர் பாராட்டி எழுதியுள்ளமை புல்லரிக்கச் செய்கிறது. 'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்' என்கின்ற வள்ளுவத்திற்கு இலக்கண-மாய்ப் பல கடிதங்கள் திகழ்கின்றன'

இலக்கண இலக்கியப் பாட்டையினின்றும் வழுவாமல், புதியன புகுத்தும் நோக்கத்தோடு விஞ்ஞானத்தின் அரிய கருத்துகளை எளிய தமிழில் கொண்டு வரும எணணம் உள்ளது. 'மெத்த வளரும் மேலைக் கலைகளை மேன்மைத் தமிழில் கொண்டு வரல் வேணடும்' என்ற பாரதியின் கனவைக் கனவாகவே விட்டு விடுவதா? எனவே தான் இந்த முடிவு. தமிழன்பர்கள இதனை விரும்பி வரவேற்பர் என்பது எமது நம்பிக்கை.

செந்தமிழைக் காலந் தொறும் படிக்கும் தமிழறிஞர்களும் பொதுமக்களும் இதழோடு தொடர்பு கொண்டு அன்புரையும் அறிவுரையும் தொடர்ந்து வழங்கக் கேட்டுக்கொள்கிறோம். இந்த இதழ் செய்திக்கதிரில் ஒரு நாவலைப் பற்றிய செய்தி பலருக்கு அதிர்ச்சியூட்டும் என்று எண்ணுகிறோம்.

வணக்கம்.

# உள்ளுரை

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | நாட்டுத் தெய்வங்கள் — க. சின்னப்பா | 1 |
| 2. | வள்ளுவரும் ஆல்பர்ட் ஸ்வைட்சரும் — பழநி. அரங்கசாமி | 9 |
| 3. | சேரமரபு — கவிராசப் பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் | 14 |
| 4. | கலித்தொகைப் பதிப்புரை — சி. வை. தாமோதரம் பிள்ளை | 32 |
| 5. | செய்திக்கதிர் | 41 |

# நாட்டுத் தெய்வங்கள்

## காளியம்மன் 3.

க.சின்னப்பா

சென்ற இதழ்த் தொடர்ச்சி.........

1) உருவங்கள் சிலேஅமைப்புக்கள் மாறுபடாது ஏறத்தாழ ஒத்து அமைந்திருப்பதாலும்

2) சிறுபான்மை மாறுபட்டிருந்தாலும் சூலாயுதம் இன்றி- யமையாது இடம் பெற்றிருத்தலாலும்

3) கோவில்கள் பெரும்பாலும் வடக்குப் பார்த்தே அமைந்- திருத்தலாலும்

4) வேப்பமரம் இவ்வம்மன் கோவில்கள் தோறும் இடம்- பெற்றிருத்தலாலும்

5) கோடை மாதங்களிலேயே பெரும்பாலும் விழாக்கள் எடுக்கப் பெறுவதாலும்

6) வெப்பு நோய் தீர்ப்பதில் இவ்வம்மன்களுக்கு உறவு இருப்பதாலும்

7) அனைத்துக் கிராமங்களிலும் இவ்வம்மனின் நிறம் கருப்- பாகவே வரையவும் பேசவும் பெறுவதாலும்

வேறுபட்ட பல்வேறு பெயர்களில் வணங்கப்பட்டாலும் அவர்கள் காளியம்மனே !

காளியம்மன் பற்றிய புராண மரபுக் கதைகள்:-

i) வடமதுரையில் தேவகமன்னன் புதல்வி தேவகியும் சூரராசன் புதல்வன் வாசுதேவனும் மணமுடித்து மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். தேவகியின் மூத்த சகோதரன் கம்சன் என்னும் கொடிய அரக்கன், நல்லவர்களை வதைத்து அல்லவர்களை வாழ வைத்தான். தேவகிக்குப் பிறக்கும் எட்டாவது குழந்தைமூலம் தனக்கு அழிவு நேரும் என்ற அசரீரி கேட்டு, தேவகிக்குப் பிறக்கும் குழந்தைகள் அனைவரையும் பிறந்த அன்றே தன்னிடம் ஒப்ப- டைக்கவேண்டும் என கம்சன் ஆணைபிறப்பித்தான். அவ்வாறே பிறந்த

முதல் ஏழு குழந்தைகளையும் பிறந்தஞான்றே கொன்று குவித்தான். எட்டாவது குழந்தை பிறக்கும் தருவாயில் வசுதேவருக்குத் தெய்வக் கட்டளையொன்று கேட்டது. அஃதாவது எட்டாவது குழந்தையாகப் பிறக்க இருக்கும் மாயவனாகிய கண்ணனைக் கம்சன் வந்து காணுவதற்குமுன் ஆயர்பாடிக்குத் தூக்கிச்சென்று அந்நேரத்தில் அங்கு அசோதைக்குப் பிறந்த பராசக்தியை எடுத்துக்கொண்டு அசோதைக்குத் தெரியாமல் கண்ணனை அங்கேஇட்டுவிட்டு வரவேண்டும் என்பது. இந்நிகழ்ச்சிகள் இனிதுநிறைவேற தெய்வசக்தி துணை இருந்தது. இப்போது கம்சனது சிறையில் தேவகியின் குழந்தையாகப் பெண் மகவு. குழந்தையைக் கொல்லுவதற்காக கம்சன் வந்து தூக்கித்தரையில் அடிக்கும்போது வெற்றித்திருநாயகி- வில், அம்பு, சூலம், கயிறு, சங்கு சக்கரம் கொண்டு காலனைவென்ற காளியாகக் காட்சியளித்துக் கம்சனை எச்சரித்து விட்டு மறைந்தாள். இவளே மாயவனது மறுஅம்சம் என்று பேசப்பெறுபவளும் மாயவன் தங்கை என நம்பப்பெறுகின்ற மாரியும் ஆவாள். "மகாபாரதம் இவளையே காளி, காராளி, மகாகாளி கபாலி, விஜயா, ஜெய, இரணப்பிரபா என்றெல்லாம் அழைக்கிறது. மகாபாரத்திலேயே ஆரியரல்லாதாரின் இந்தக் காடுவாழ்தெய்வம் பயங்கரமான கரியதெய்வமாகவும் மாலுக்கு இளையவளாகவும், மகிசனைக் கொன்றவளாகவும் வருணிக்கப்படுகிருள்" என்பார் பி. எல், சாமி அவர்கள்.

ii) சமதக்கினி முனிவரது பத்தினி இரேணுகாதேவி. இவர்களுக்குப் புத்திரர் நால்வர். நான்காவது மகன் பரசுராமர். சமதக்கினி முனிவரது பூசைக்காக அதிகாலையில் நீர் கொணர இரேணுகாதேவி செல்லும்போதெல்லாம் குடம் கொண்டு செல்லுவதில்லை. தண்ணீரை அள்ளும்போது தண்ணீரே குடமாகவும் மாறும். ஒருநாள் குளத்தில் குனிந்து தண்ணீர் அள்ளும்போது வானில் பறந்து சென்று கொண்டிருந்த தேவன் ஒருவனது நிழலைக்கண்டு, "ஆகா! இப்படியும் ஒரு சுந்தரனு?" என வியந்தாள். ஒன்று சேர்ந்த குடம் உடைந்து விட்டது. நீர்க்குடம் இன்றித் திரும்பினுள்- உண்மையை உணர்ந்த முனிவர் தனது குமாரர்களை அழைத்து இரேணுகாதேவியைச் சிரச்சேதம் செய்ய உத்தரவிடுகிருர். அவர்கள் மறுக்கின்றர். இறுதியில் இவர்களுக்கு நான்காவது மகனுகப் பிறந்தவரும் மகாதேவனின் அம்சம் என நம்பப் பெறுகிறவருமான பரசுராமர், தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்ற நியதியை உலகிற்கு உணர்த்தத் துணிந்து இரேணுகாதேவி-

---

O, தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு , பக்-48.பி.எல் சாமி

யின்மீதுஅவர்தம் கைத்தனுசைவீச, அப்போது அவளைக்காக்க முயன்று வீழ்ந்த பணிப்பெண்ணின் உடலையும் துண்டமாக்கியது. மகிழ்ந்த தந்தை என்னவரம் வேண்டும் என மகனைக்கேட்க'தாயில சிறந்ததொரு கோவில்இல்லை' என்பதை நிலைநாட்ட எனக்குத்தாய் வேண்டும் என் கிறார் பரசுராமர். 'சிரமும் உடலும் சேர்ந்து உயிர் பெறுக' என முனிவர்கூற, முனிவரின் காலருகே கிடந்த இரேணுகாதேவியின் தலையும் பணிப்பெண்ணின் உடலும் சேர்த்து மாற்றங்கி என்றாகி மாரியம்மன் ஆனது.

காளி பற்றி இவ்வட்டாரத்துச் சில கிராமங்களில் வழங்கும் கதைகளும் வியத்தகு செய்திகளும்:-

வட்டாரத்து வழங்கும் கதைகள் சில:-

அ) நேசநேரி-காளி:- இந்த ஊரிலிருந்து சிலர் வடக்கே வியா-பாரத்திற்காகச் சென்று திரும்பும்போது வைக்கோல் வாங்கி வந்திருக் கின்றனர். வரும் வழியில் ஒரு பெண் அவர்களைப் பார்த்து தான் அனாதி என்று சொல்லி உங்களுடன் வைக்கோல் வண்டியில் ஏறி வருகிறேன் என்றும் சொன்னாளாம். அவர்களும் உடன்பட்டு வண்டியில் ஏற்றி வந்திருக்கின்றனர். மூன்று நான்கு கல் தொலைவைக் கடந்த வுடன் வண்டியில் வந்த பெண்ணைக் காணவில்லை, இரவு நேரமாய் இருந்ததால் அந்தப் பெண் நமக்குப் பயந்து இறங்கி எங்கோ ஓடி விட்டாள் என நினைத்து வண்டியை ஊருக்கு ஓட்டிவந்து விட்டனர். மறுநாள் வண்டி ஓட்டிவந்த ஒருவருக்கும் ஊரில் மற்றவர்களுக்கும் காலரா ஏற்பட்டது. இது தெய்வத்தால் வந்த சோதனை என எண்ணிக் குறி கேட்டார்கள். ஒரு பெண்ணின் மீது சாமி இறங்கி, "நான் தான் வண்டியில் வந்தவள். என் மகிமையை உங்களுக்குக் காட்டினேன் என்னை இந்த மந்தையில் தெய்வமாக வைத்து வணங்கி வந்தால் நோய் வராமல் உங்களைப் பாதுகாத்துத் தருகிறேன். இது முக்காலும் சத்தியம்"-என்றுசொன்னாளாம். அன்றிலிருந்து இந்த நோய் வராமல் போகவே நன்றியோடு இவ்வம்மனை மந்தைக்காளியம்மனாக வைத்து வணங்கி வருகிறார்கள் என்பது செவிவழிக்கதை

ஆ) தூம்பக்குளம்-பத்திரகாளி:-

கன்னடிய இனத்தைச் சேர்ந்த ஒருவர் சோழவந்தான் வையைக் கரையோரத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்தபோது வையையாற்றில் பெட்டியொன்று மிதந்து வருவதைக் கண்டார். பூக்கூடையைப்போட்டு விட்டு ஆற்றினுள் பாய்ந்து பெட்டியை எடுத்துக்கொண்டு கரை

ஏறினர். யாரும் பார்த்துவிடுவார்கள் என்ற அச்சத்தின் மிகுதியால் அவ்விடத்தில் பெட்டியைத் திறக்க அஞ்சித் தலையில் சுமந்துகொண்டு தெற்கே நடந்தார். தூம்பக்குளம் வழியாக வந்து அவ்வூரின் எல்லையில் பெட்டியை வைத்துவிட்டு ஊரினுள் சென்று உணவருந்திவிட்டுத் திரும்பி பெட்டியைத் தூகக முயலும்போது பெட்டி அசையவில்லை. அவ்வழியில் சென்ற தேவர் இனப்பூசாரியை அழைத்து 'பெட்டி அசைய மறுக்கிறதே! என்ன செய்வது' என்று வினவினர். பூசாரி விரைந்து சென்று கற்பூரம் தேங்காய் பழம் கொணர்ந்து பூசை செய்யும்போது அவருக்கு அருள் இறங்கியது. "அடேய்! எனக்கு எருமைக்கடாவும் கருவுற்ற பெண்ணும் பழி கொடுக்க வேண்டும்; நான் தான் காளி" எனத் தெய்வமேறிய பூசாரி சொன்னர். அதற்குக் கன்னடியர் "பலி கொடுக்க முடியாது; பொங்கல்வைத்துத் தேங்காய் பழம் உடைத்துப் பூசை செய்கிறேன்' என்ருர். அதற்கு ஒத்துக்கொண்ட தெய்வம் "நான் இருக்கும் இடத்தில் கொட்டுச் சத்தமோ, உரல் உலக்கைச் சத்தமோ கேட்கக்கூடாது; அப்படியாயின் உங்களைக் காப்பேன்"- என்று சொல்ல, அதற்கு கன்னடியர் ஒத்துக் கொள்ள பெட்டி திறந்தது. அதில் சூலாயுதம் மட்டும் இருந்தது, அந்த இடத்தில் பீடம் கட்டி அதன்மேல் சூலாயுதத்தை நாட்டி இன்றும் தெய்வமாக வணங்கி வருகிருர்கள்,

இ) கல்லணை-கல்கத்தா காளி:-

கல்லணைப் பூசாரி ஒருநாள் கூமாபட்டிக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தபோது நடுஇரவு ஆயிற்று. இந்த இரவில் எவ்வாறுவழி பார்த்து ஊருக்குச் செல்வது என்று அவர் தயங்கிக்கொண்டிருந்த-போது ஒருபெண் தலைவிரி கோலமாக அவர் அருகே பறந்துவருவது போல் ஓடிவந்து கொண்டிருந்தாள். பூசாரி மிகவும் பயந்து அந்தப் பெண்ணின் காலில் விழுந்து வணங்கி 'அம்மா என்உயிரை வேண்டுமானுலும் எடுத்துக் கொள்' என்று அலறினராம். அந்தப் பெண் வாய்விட்டுச்சிரித்து,'மகனே நான் எதிரிகளின் தாக்குதல்களி ஞல் கல்கத்தாவிலிருந்து பறந்துவந்தேன். உனக்கு விருப்பமானுல் என்னை உன் ஊருக்கு எடுத்துச் சென்று என்புகழைச் சொல்லி மக்களை வணங்குமாறு செய்''எனக்கூறி மறைந்தாளாம். அவள்நின்ற இடத்தில் பிடிமண் எடுத்துவந்து கோவில் கட்டி கல்லணைக்காரர்கள் வணங்குகிருர்கள். இக்காளி நின்றஇடத்தைக் கூமாபட்டிக்காரர்களும் வணங்கி வருகிருர்கள்.

ஒரு ஊரில் வாழும் மக்கள் சில காரணங்களால் வேற்றூருக்குக் குடிபெயரும்போது, தங்களது உடைமைகளை எடுத்துச் செல்லும் போது கோவிலையும் கொண்டு செல்கின்றனர். கட்டிடத்தையோ சிலையையோ, பீடத்தையோ பெயர்த்தெடுத்துக் கொண்டு செல்ல முடியாத காரணத்தினால் கோவில் முன் கைப்பிடி அளவு மண் எடுத்து பச்சைக் குடத்தில் வைத்து குடத்தை மஞ்சள் துணியால் மூடிக் கொண்டு சென்று அவர்கள் வாழநேர்ந்த இடத்தில் கோவில் எழுப்பி இப் பிடிமண்ணைக் குடத்தோடு கோவிலுக்குமுன் புதைத்து வைக்கின்றனர். இப்படி மண்மூலமாகத் தெய்வமும் உடன் வந்தெழுந்தருளுவதாக நம்புகின்றனர்.

## வியத்தகு செய்திகள்

### அ) சின்னசெங்கப்படை- காளி:-

மழைக் காலத்து இரவில் ஒரு நாள் பூசாரியின் மனைவிமட்டும் கோவிலில் இருக்கும்போது புதியவன் ஒருவன் கையில் அரிவாளுடன் வர, பூசாரியின் மனைவிஅதனைப் பார்த்துப் பயந்து ஊருக்குள் இருக்கும் தன் வீட்டிற்கு ஓடிவிட்டாள். வந்தவன் அம்மன் அணிந்திருந்த தங்க நகைகளைத் திருடிக்கொண்டு சென்றுவிட்டான். காலையில் பூசாரி வந்து கண்டு பதறி ஊரைக்கூட்டி அம்மன்நகைகளைத் திருடியவனைப் பிடித்து காவல்காரரிடம் ஒப்படைத்தால் தக்க சன்மானம் வழங்கப் பெறும் என்று பறைசாற்றினான். பலர் முயன்றும் திருடியவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஊர் மக்கள் ஒன்றுகூடிக் காளிதேவியிடம் முறையிட்டு வருந்திவழிபட்டார்கள். காளிதேவி சுயவடிவில் தோன்றிக் களவு செய்தவன் இக்கூட்டத்தில் உள்ளான் எனக் கூறி அவனைப் பிடித்து ஊர்மக்களுக்குக் காட்டி நாக்குத் தள்ளப் போட்டுவிட்டாள். "தாயே உன் அருமை பெருமை அறியாத அச்சிறுவனை மன்னித்து அருள வேண்டும்" என ஊர் மக்கள்வேண்டினார்கள். 'மாண்டவனுக்கு மாற்று வழி கிடையாது' என அம்மன் மறுத்து மறைந்துவிட்டாளாம்.

### ஆ) உச்சபட்டி- உச்சமாகாளி:-

வட நாட்டில்இருந்து வந்த பெண்தெய்வம்தான் இக்காளி என நம்புகிறார்கள். உச்சபட்டிக் கிராமம் வழியாக வந்த இந்தத் தெய்வம் இங்கேயே தங்கிவிட்டதாம். இவ்வூர் மக்களும் நினைத்த காரியத்தில் வெற்றிபெறுதற்கு இத்தெய்வத்தை வணங்கி வந்திருகின்றனர். உச்ச பட்டியைச் சேர்ந்ததொரு பெரியநிலக்கிழார் கடவுளை வெறுப்பவர்.

அவருக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். ஒருமுறை உச்சபட்டி மாகாளிக்குத் திருவிழா எனத் தண்டோராப் போடப்பட்டது. விழாவும்நடக்கும் போது அதுகண்டு வெறுப்படைந்த நிலக்கிழார். தன் கையாட்களை ஏவிப் பூசாரியையும் விழாக்குழுவினரையும் அடித்து விரட்டியிருக்கிறார். பின்னர் ஒருநாள் தன்மகளுக்குத் திருமணம் நிச்சயித்துத் தாலிகட்டும் முகூர்த்த வேளையில் மணமகன் பிணமாகினான். அன்று முதல் அவர் மகளை மணக்க எவரும் முன்வரவில்லை. மனம் வெதும்பிய நிலக்கிழார் மாரடைப்பால் மரணமடைந்தார். அவர் பெண்ணும் ஆற்றில் வீழ்ந்து உயிர்நீத்தாள். உச்சமாகாளி தன்னை அவமதித்த நிலக்கிழாரை வம்சத்தோடு ஒழித்துவிட்டாள் என்று கூறி மிகப் பயபக்தியுடன் இத்தெய்வத்தை இவ்வூரார் வணங்கி வருகின்றனர்.

இ) க. வெள்ளாகுளம்-காளி:-

சூலாயுதம் மட்டும் என்றும் உடைய இக்கோயிலில் இவ்வம்மனுக்கு ஆண்டு விழாவின்போது சிலைசெய்து வழிபட்டுப் பின் அழித்து விடுகின்றனர். ஏன்? என்றபோது 'முத்தாலம்மன் போன்று அன்று தோன்றி அன்று அழியும் அம்மன்' என்று கூறுகின்றனர்.

ஈ) நக்கலக்கோட்டை- காளி:-

பொருள் ஏதாகினும் களவுபோய் விட்டால் எடுத்தவர்கள் யாரும் அறியாமல்கொண்டுவந்து சேர்க்காவிட்டால்காசுவெட்டிப் போடுவேன் என்று சொல்ல பொருள் வந்துசேர்ந்துவிடும்.காசுவெட்டிப் போட்டால் களவு செய்தவர்கள் உயிருக்குத் தீங்கு நேருமாம்.

உ) நடுக்கோட்டை-பத்திரகாளி:-

விழாவின்போது அம்மன்சிலைசெய்து அதை நெற்குதிர் ஒன்றில் வைத்து மூடி அந்தக் குதிருக்குமுன் அமர்ந்து பூசைகட்டி வணங்குகிறார்கள். ஆறுமாதம் கழித்து அம்மனைக் காமாட்சி கோவிலுக்குள் வைத்து பின் வெளியில் எடுத்துக் குடமுழக்குச்செய்து வணங்கி வருகிறார்கள், சென்னைப்பகுதிகளில் இருந்துகூட மக்கள் வந்து காணிக்கை செலுத்தி இருக்கின்றனர். இக்கோவிலில் பூசாரியாகவும் சாமியாடியாகவும் இருப்பவர் பில்லி சூனியம் விரட்டுவதில் வல்லவராம், இவர் மண்கரகம் எடுத்து ஆடிவரும்போது காலில் விழுந்து குறி கேட்டால் உள்ளதை உள்ளவாறு சொல்லுவாராம்,

ஊ) செங்குளம்-செல்லாயி:-

தன் இனத்தாரோடு பகை ஏற்பட்டதன் காரணமாக தாய், தந்தை, மகள் ஆகிய மூவரும் இரவோடு இரவாகத் தாங்கள் இதுநாள்வரை வாழ்ந்த காவிரிப்பூம்பட்டினத்தை விட்டு வெளியேறினர். இவர்கள் காவிரியாற்றை நெருங்கும்போது பகைவர்கள் விரட்டி வருவதைக் கண்டார்கள். அப்போது மகள், "நான் உத்தமி பத்தினியாக இருந்தால் இரு கரைகளிலும் உள்ள தோப்பின் தென்னை மரங்கள் ஒன்றின் மேல் ஒன்று விழுந்து எங்களுக்கு வழிவிடவேண்டும். நாங்கள் அக்கரையைக் கடந்தவுடன் மீண்டும் நிமிர்ந்து மரமாக வேண்டும்,' என மனதிற்குள் எண்ணி வழிபட்டாள். அதே போன்று நிகழ்ந்தது. ஆற்றைக் கடந்து பல ஊர்களையும் கடந்து செங்குளம் அருகில் வந்தார்கள். தந்தையானவர் தாயையும் மகளையும் ஒரு மரத்தடியில் தங்க வைத்துவிட்டு, "நான் ஊருக்குள் சென்று தங்குவதற்கு இடம் பார்த்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றூர், இடம் பார்த்த பிறகு இவர்களை அழைக்க மரத்தடிக்கு வரும்போது தாய் தூங்கிக்கொண்டிருந்தாள். மகளை எழுப்பி எங்கே எனக் கேட்டுத் தேடிப் பார்க்க மகள் கற்சிலையாக நின்ருள், தாயும் தந்தையும் பார்த்துத் திகைத்து அழ, மகள் உருவம் பெற்று அழாதீர்கள்,' செங்குளத்தில் சென்று குடியேறுங்கள்,' நான் உங்களுக்குத் துணையாக இருப்பேன்,' என்னைக் குலதெய்வமாக வணங்குங்கள்' — எனச் சத்தியம் வாங்கிக் கொண்டு மீண்டும் சிலையாகிவிட்டாள். அன்றிலிருந்து செங்குளத்திற்கு வெளியே செல்லாயி அம்மன் என்ற பெயரில் வணங்கி வருகிருர்கள்.

எ) கல்லுப்பட்டி - செல்லையம்மன்:-

இவ்வூர்க் கருப்பணன் என்பவனுக்குக் காய்ச்சல் கண்டபோது இனிப் பிழைக்க மாட்டான் என அனைவரும் கைவிட அவன் மனைவி பார்வதி இவ்வம்மன் கோவிலுக்குச் சென்று முட்டி அழுது என் உயிரை எடுத்துக்கொள் என்று உயிர்விடத்துணிந்தாளாம். அப்போது ஒருத்தி ஓடிவந்து உன்கணவன் பேசுகின்றான் என்றுகூற, இவள் கோவிலில் இருந்து அம்மனது விபூதி எடுத்துக்கொண்டு சென்று கணவனுக்குப்பூசஅவன்நோய் நீங்கியதாம், சென்று முறையிட்டவரின் சிக்கலைத் தீர்ப்பாளாம் இச்செல்லையம்மன்'

ஏ) காங்கேயநத்தம் - வடக்குவாச்செல்லி:-

இவ்வூரிலிருந்து வியாபாரம் செய்ய வடக்குநோக்கிச் சென்ற முன்னோர்கள் வழிதெரியாமல் திணறிக்கொண்டிருக்கும்பொழுது தங்கள் குலதெய்வமாகிய செல்லியம்மனை வணங்கி வழிகேட்டனர். அப்போது ஒரு முதியவர் அந்த வழியே வந்தார். அவர், 'என்ன இங்கே நிற்கிறீர்கள்?' எனவினவ, நாங்கள் காங்கேய நத்தம் போய்ச் சேரவேண்டும்: வழிதெரியவில்லை'' என்று இவர்கள் சொன்னார்கள் அவர்,' நானும் அவ்வூர்வழியேசெல்லவேண்டும்; வாருங்கள்போவோம் என அழைத்துக் கொண்டு வந்தார். ஊரை அடைந்து கோயில் அருகே வருபபோது பெரியவரைக் காணாது திகைத்தனர். பின்னர் அது அவர்களது குலதெய்வம் - வடக்குவாச் செல்லியம்மன் என்று உணர்ந்து பக்தியால் மகிழ்ந்து ஆண்டுதோறும் புரட்டாசி மாதத்தில் வணங்கி வருகின்றனர்.

காடமர்செல்வி துணங்கையஞ்செல்வி, கடல்கெழுசெல்வி என்னும் பெயர்களில் உள்ள செல்வி என்ற சொல் கன்னி என்ற பொருளைக் குறிப்பிடுகிறது. செல்வி என்ற சொல்லே 'செல்லி' என மாறி செல்லாயி அம்மன் முதலிய தாய்த்தெய்வப் பெயர்களில் வழங்குகிறது. எனவே வடக்கு வாழ்செல்வி> வடக்கு வாச்செல்வி> வடக்குவாச் செல்லாயி> வடக்குவாச்சி முதலிய பெயர்களில் செல்வி என்ற சங்கச் சொல் வழங்குகிறது செல்வம் என்றால் செழிப்புஎன்று பொருள். செழிப்பு அருளுபவள் எனவே செல்வி என்றும், வடக்கே இருந்து வந்ததாக நம்பப்பெறுவதால் வடக்குவாழ்செல்வி என்றும் வழங்கப் பெறுகிறாள்.

.......... இவ்வட்டாரத்துக் காளி பற்றி வழங்கும் கதைகளிலோ, வியக்கத்தகு செய்தகளிலோ புராண மரபுக்கதைகள் கடுகளவும் பின் பற்றப்படவில்லை. அவர்களுக்கு அதுபற்றிக் கவலையில்லை. ஆனால் வடக்கே இருந்துவந்த அம்மன் இவ்வம்மன் என்பதுவும் இதனுடைய ஆயுதம் சூலாயுதம் என்பதுவும் இவர்கள் அனைவருக்கும் ஒத்த கருத்தாகும்.

---

# வள்ளுவரும் ஆல்பர்ட் ஸ்வைட்சரும்

பழநி. அரங்கசாமி

ஆல்பர்ட் ஸ்வைட்சர் ஐரோப்பாவின் ஜெர்மனியிலே பிறந்து பாரிஸ் மாநகரத்தில் வளர்ந்து இருண்ட கண்டமெனும் ஆப்பிரிக்கக் காடுகளிலே கரிய நிறம் படைத்த நீக்ரோக்களுக்குப் பணி புரிந்த வெள்ளையர். புறத்தே வெளுத்து அகத்தே கறுத்த ஏனையோரைப் போலன்றி அகமும் புறமும் வெளுத்த அன்பினர். வாழ்க்கையின் வசதிகளையெல்லாம் உதறித் தள்ளி மன்னுயிரெல்லாம் தன்னுயிர் என்றெண்ணி நீண்ட பெருங்காட்டில் குடிசையில் வாழ்ந்து நோய்கள் மலிந்த நீக்ரோக்களுக்கு அகங்குளிர முகம் மலர அன்புப்பணி புரிந்த செம்மல் குளிர் நாட்டில் பிறந்தாலும், கொளுத்துகின்ற வெயிலையும், கொட்டுகின்ற வியர்வையினையும் பொருட்படுத்தாது (தன்பால் வந்த நீக்ரோக்களின் பிணி தீர்த்த பெருமான். வாழ்க்கையின் முதல் முப்பதாண்டுக் காலம் தத்துவம்பயின்ற வித்தகராய்த்திகழ்ந்த ஆல்பர்ட் ஸ்வைட்சர் முப்பதிற்குப் பின்னர் தனது முதுமைக் காலம் வரை மருத்துவப்பணி புரிந்தார். மத்திய ஆப்பிரிக்காவின் கேபன் மாநிலத்தில் லாம்பரீன் என்ற இடத்தில் அவர் அமைத்த மருத்துவ-மனை பல நூறுமைல் சுற்றளவில் நோய் மலிந்த மக்களைத் தன்பால் ஈர்த்து உடற்பிணி நீக்கிப் பசிப்பிணியும் போக்கிய அறச்சாலையாகவும் விளங்கிற்று.

விலங்குகள் நிறைந்த பெருங்காடு. முதலைகள் மலிந்த ஆறுகள். சாலைகளும், ஏனை வசதிகளும் இல்லாத தனிமை. அப்படிப்பட்ட ஓரிடத்-தில்தான், மருத்துவமனையைத் தொடங்கி, (அன்பு மனைவியின் அரிய தொண்டும் துணை புரிய) அல்லும் பகலும் அயராது பாடுபட்டார் ஸ்வைட்சர். இப்படி மொழி கடந்து இனம் கடந்து நாடுநகரைப்பின் தள்ளிக் காடுகளிலே பணி புரிந்த அந்த மேல் நாட்டு மருத்துவப் பேரறிஞனின் சிந்தனையில் தமிழ்நாட்டு வள்ளுவர் இடம்பெற்றது வியப்பிலும் வியப்பே.

வள்ளுவரின் செந்தமிழ்க்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் ஏற்றி வைக்கப்பட்ட அறிவுஒளி. அகில உலகமும் அஞ்ஞானத்தின் தலைப்பட்டு ஆணவத்தின் சுழிப்பட்டு அக்கிரமத்தின் நெறிப்பட்டு மனிதாபிமானம் மறந்த காலையும், மனிதனை மனிதனுக்கக்கூடிய மாபெரும் பனுவல். காலத்தின் கறை படியாது நாடு, மொழி, இனம் ஆகியவற்றைக் கடந்து உலகளாவிய

கருத்துகளைத் தன்பாற் கொண்டிலங்கும் அறிவுப்பெட்டகம். வள்ளுவச் சிந்தனையாம் பல்வேறுநதிகள் புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி எங்கும் கங்குகரை காணுதகடல். தமிழன்பர்கள் கண்ணுகைக் காண்கின்ற கதி மறநெறி போக்கிஅறநெறிக்கு ஆற்றுவிக்கும் அறச்சாலை. தமிழகத்தில் எழுதப்பட்டாலும், தரணியின் கவனத்தைத் தன்பால் ஈர்த்த கருத்துக்குன்றம். தரணியெங்கும் அறிவுநிழல் பரப்பி நிற்கும் அன்புச்சோலை,

சிறைச்சாலை கொடியதுதான். ஆனல் அங்கே கிடைக்கும் தனிமையும் ஒய்வும் தக்காங்கு பயன்படுத்தப்பட்டால், நலம்விளைதல் உறுதி. உலகத்தின் மிகச்சிறந்த பலநூல்கள் சிறைகளிலே எழுதப்பட்டுள்ளன. பண்டிதநேரு இந்தியநாட்டின் வரலாற்றினை அகமதுநகர் சிறையில் தான்எழுதினர்.ராஜாஜி திருக்குறளை ஆங்கிலத்தில்பெயர்த்தெழுதியது சிறையில்தான். நாமக்கல் கவிஞரின் 'மலைக்கள்ளன்' என்னும் பெயரிய சிறந்த புதினமும் சிறையில்தான் உருவாகியது. ஆல்பர்ட் சுவைட்சரும் இத்தகு செயலுக்கு விதிவிலக்கல்ல.

அடால்ப் ஹிட்லரின் எழுச்சியினையும், வீழ்ச்சியினையும் ஒருங்கே கண்ட இரண்டாம் உலகப்போர் தொடங்குவதற்குச் சில ஆண்டுகளே இருந்தன. ஆல்பர்ட் சுவைட்சர் ஜெர்மனிநாட்டைச் சார்ந்தவர் என்ற காரணத்தால் சிறையிலேதள்ளப்பட்டார். இன்னுமையை இன்பம் எனக்கொள்ளும் ஸ்வைட்சரின் சீரிய சால்பினையும் நேரிய பண்பினையும் சிறைச்சாலை ஒன்றும் செய்யமுடியவில்லை. இந்திய நாட்டின் தத்துவக் கண்ணேட்டம் வளர்ந்த சீரும் சிறப்பும் ஸ்வைட்சரின் சிந்தனையைக் கவர்ந்தன. வலியவந்த ஒய்வைச் சலியாது பயன்படுத்த எண்ணிய அப்பெருமகன் இந்தியாவின் எழுதாக்கிளவி தொடங்கி சாங்கிய, சமண புத்தமதக்கோட்பாடுகளையும், அவைகளை உள்ளடக்கிய உபநிஷதம் கீதை, திரிபீடகம், தம்மபதம் உள்ளிட்டு தற்காலத்தில் இந்தியச் சிந்தனைகள் வரைக்கற்றறிந்து தன் ஆய்வுரையை Indian Thought and its Development என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிருர். இமய முதல்குமரிவரை வளர்ந்த இந்தியப் பெருநிலத்தின் வேருன்றிய தத்துவக் கருத்துகளில் அருங்குறட் பெருநூலின் பங்கினையும் அவர் காண முயன்றிருக்கிருர்.

இந்திய மொழிகளைத் தானறியாதநிலையிலும் இந்தியமண்ணின் தத்துவங்களைப் பேசும் ஷோபனீர், விண்டர்னீட்ஸ் போன்ருேரின் ஐரோப்பிய மொழிகளில் எழுதப்பட்ட கருத்துக்களைத்தான் ஸ்வைட்சர்

முதலில் சரியென்று எண்ணியிருக்கிருர். "வாழ்வாவது மாயம் மண்ணுவது திண்ணம்" என்று கூறி இகத்தை வெறுத்துப்-பரத்தை நாடுதலே இந்திய தத்துவத்தின் உயிரோட்டம் என்று அவர்கள் கூறிய கருத்தைச் சரி பார்க்க முயன்றபோது இந்தியப் பெரு நிலத்தின் பல்வேறு பனுவல்களே ஆய்ந்திருக்கிருர்.

உலக வாழ்க்கையினை மாயம் என்று உதறித்தள்ளுவது புத்தமதம். இம்மை வாழ்வுக்குப் போதிய மதிப்பு அளிக்காது மறுமைக்கே முக்கியத்துவம் கொடுப்பது மனுநீதி. ஆனல் குறளோ மறுமைக்கு முதலிடம் கொடுக்காது இம்மைக்கே முதலிடம் அளிக்கின்ற தன்மை கண்டு ஸ்வைட்சர் பெரிதும் மகிழ்கிருர். உலகவாழ்க்கையினை 'மாயை' என்று பலர் கூறுவதை ஸ்வைட்சர் ஒத்துக்கொள்ளவில்லை. உலகவாழ்வின் முக்கியத்துவத்தை ஒத்துக்கொண்டால் தனக்கும், நாட்டுக்கும், சமூகத்திற்கும் உலகத்திற்கும் பணிபுரிந்து தானெடுத்த மனிதப்பிறவியினைப் பெருமைப்படுத்த முடியும் என்று ஸ்வைட்சர் கருதுகிருர். கைம்மாறு வேண்டாத பெரும்பணி செய்ய வேண்டுவதாயின், மனிதப் பிறவியும் இந்த மாநிலத்தே வேண்டுவதுதான் என்பதே அவர்கருத்து

'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று'

"இருந் தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற குறட்பாக்களில் இம்மைக்கு வள்ளுவர் கொடுத்திருக்கின்ற மதிப்பினை ஸ்வைட்சர் உணர்ந்து பாராட்டுகிருர். அதுமட்டுமன்றி உள்ளங்கவர்ந்த காதல்வாழ்வினை 250 பாடல்களிலே விதந்து பாடி இம்மை வாழ்வின் ஏற்றத்தைக் காட்டிய வள்ளுவப் பெருந்தகையினைப் போற்றுகிருர். இந்த இன்பத்துப் பாலினையே தெய்வீகக் காதலின் மானிடமொழி விளக்கம் என்றுகூற யாரேனும் முயன்ருல் அதனை ஸ்வைட்சர் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. இன்பத்துப்பாலில் இகவாழ்வின் உயர்வினைப் போற்றிப் பாராட்டுவதுதான் வள்ளுவரின் நோக்கம் என்கிருர் ஸ்வைட்சர். இம்மையின் பெருமையை வலியுறுத்துவதற்குத்தான் பைபிளில் வருகின்ற 'சாலமன் பாட்டு' மேனுட்டுத் திருமணங்களில் தொடக்க காலத்தே பாடப்பட்டு வந்தது பிற்காலத்தில்தான் அதற்குத் தெய்வீகச் சாயம் பூசி விட்டார்கள் என்கிருர்.

குறளிலே காணப்படுகின்ற ஈகை, அறவொழுக்கம் போன்ற நற்குணங்கள் பிராமணீய, புத்த, பகவத்கீதைக் கொள்கைகளுக்குக் கொஞ்சமும் கட்டுப்பட்டதல்ல என்று கூறி குறளின் தனித்தன்மையைச் சுட்டிக் காட்டிகிருர்.

'கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு
என்ஞற்றுங் கொல்லோ உலகு'

என்ற குறட்பாவினை எடுத்துக்காட்டி, பகவத்கீதை இம்மை வாழ்வின் நன்மைக்காக ஈதல் வேண்டும் என்ற வலிந்துகூறியதையும், இம்மை மட்டுமன்றி மறுமையும் கூடக் கிடைக்கவில்லையாயினும் ஈதலே நன்று என்று குறள் சொல்லியதையும் ஒத்துப்பார்த்து வடமொழிக் கீதையி-னும் தென்றமிழ்க்குறள் ஒருபடிமேம்பட அமைந்திருப்பதை ஸ்வைட்சர் பாராட்டுகிறர். அனைவராலும் வியந்து பாராட்டப்படுகின்ற கருத்து ஒன்று பைபிளில் உண்டு. 'வலது கன்னத்தில் அறைந்தால், மறு கன்னத்தையும் காட்டு' என்பதே அது. ஒறுத்தலைப் பொறுத்துக் கொள்ளாது. திருப்பி அவனுடைய இரண்டு கன்னங்களிலும் நாம் அடித்தால் அது அதமம். ஆனல் பைபிளின் கருத்தோ 'ஒருவன் உனக்குத் தீங்கு செய்தாலும் நீ அவனை எதிர்த்து ஒன்றும் செய்யாது அமைதியாகப் பொறுத்துக்கொள்' என்பதே. இது மத்திபம். இம் மாதிரியான சூழ்நிலைக்குக் குறள் காட்டும் வழியோ இவ்விரண்டிற்கும் மாறுபட்டதாகும்.

'இன்ன செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?''

இன்ஞதன செய்தார்க்கும் மீட்டும் நல்லன செய் என்பதே வள்ளு-வத்தின் கருத்து குறள் காட்டும் வழி உத்தமம் எனறு சொல்லத் தேவையில்லை.

மேல் வருணச் சாதியினர் வகுத்த நெறிமுறைதான் கடமை என்று வரம்பு கட்டுவது கீதை. நல்லன செய்தலே கடமை என்பதுகுறள்.

''கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்ருண்மை மேற்கொள் பவர்க்கு''

புத்தரின் தம்மபதம், பகவத்கீதை ஆகிய அறநூல்கள் போதிக்கின்ற கொல்லாமையினையும்,புலால் மறுத்தலையும் குறள் ஒத்துக்கொள்கிறது.

'அறவினை யாதெனிற் கொல்லாமை'

,கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்'

மேலோட்டமாக இந்நூல்களுக்குள் ஒருமைப்பாடு காணப்பட்டாலும்' கொல்லாமையில் புத்தக் கொள்கைக்கும், குறளுக்கும் ஒருசிறு மாறு பாடு இருப்பதை ஸ்விட்சர் சுட்டிக் காட்டுகிறுர். புத்தநீதி புலால் உண்ணுதலே முற்றும் தவறென்று கூறவில்லை. மனமறிந்து கொல்லு தலேத்தான் தவறென்று சொல்கிறது. அறியாமையால் கொல்லு தலேயோ, பிறர் கொன்று தான் உண்பதையோ புத்தநீதி தவறென்று சொல்லவுமில்லை; தடுக்கவும் இல்லை. இலங்கையில் உள்ள புத்த சந்நி-யாசிகள் இன்றும் கூடத் தாமாகக் கொன்று தின்பதில்லேயே தவிர, பிறர் சமைத்துத் தனக்குத் தருகின்ற ஊனே விருப்புடன் ஏற்றுக் கொள்கின்றனராம். ஆனல் வள்ளுவரோ

"தன்னூண் பெருக்கற்குத்தான் பிறிதூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?"

என்று கேள்வி கேட்பதோடுகூட

"ஒன்ருக நல்லது கொல்லாமை......

என்றும் கூறி கொலே செய்யாமையை ஒப்பற்ற செயலாகப் போற்று-கிறுர்.

இந்தியாவிலே தோன்றி உலகின்பெரும் பகுதியில் வேரூன்றி நிற்கும் புத்தமதக் கொள்கையில் பெண்ணுக்கு உரியஇடம் அளிக்கப் படவில்லே.

கோபம்,பொருமை, மதியீனம் ஆகியவற்றைப் பெண்களின் இயல் புகள் என்றுகருதும் புத்தமதக் கொள்கையினேக் கூறிய ஸ்வைட்சர்,

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள'

என்ற குறளோடு அதனே ஒப்பிட்டுப் பார்க்கத் தூண்டுகிறுர்.

மேனுட்டு மருத்துவப் பேரறிஞனின் ஆழ்ந்த சிந்தனேக்கும், அரிய ஒப்பீட்டுக்கும் காரணமாய அரும்பெரும் குறள் நூலே இதுவரை மொழி பெயர்க்கப்படாத உலக மொழிகளில் மாற்றிக் கொடுப்பது இற்றைத் தமிழரின் தலேயாய கடமையாகும். கிறித்தவரின் பைபிள் உலகமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்களில் முதலிடம் வகிக் கிறது. ஆனல் அது மதநூல். எனவே மதத்திற்கும், குறிப்பிட்ட எந்தக் கோட்பாட்டிற்கும் அப்பால் நின்று,உலகளாவிய கருத்துக்களேத் தன் பாற் கொண்டிலங்கும் திருக்குறளே அச்சிட்டு இலவசமாகவோ மலி வாகவோ எங்கணும் பரப்புகின்ற பெருந் தொண்டைத் தமிழ்ச் செல்வர்கள் மேற்கொள்ளல் வேண்டும்.

# சேர மரபு

கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் (மான்முருகனூர்)
நாவரில்லம், நாகர்கோயில் 2

## மூவேந்தர்

### பெயர்

நம் பாரதநாடு தென்பால் தமிழ் வேந்தர்களாலும் வடபால் ஆரிய வேந்தர்களாலும் ஆளப்பட்டு வந்தது. வட நாட்டில் ஆரிய வேந்தர்கள் பலராயிருந்தமையாலும், பிற்காலத்தில் வேற்று நாட்-நாட்டினரும் அந் நாட்டை ஆண்டு வந்தமையாலும் ஆங்கு வட மொழிச்சார்பின ஆகிய பல மொழிகள் பயின்று வந்தமையாலும் அவ் வட நாட்டு வேந்தர்கள் மூவேந்தர் என்றாற் போலத் தொகுத்து எண்ணப்படவில்லை. தமிழ்நாட்டை மூவேந்தர்களே நெடுங்காலம் புகழும் புண்ணியமும் வாய்ப்ப ஆண்டு வந்தமையாலும் அவர் மொழி தமிழ் என்னும் ஒரு மொழியாகவே இருந்தமையாலும் தாமுள்ளளவும் பிறர் வந்து ஆளுவதற்கு இடங்கொடாமையாலும் தாம் தமிழர் என்ற ஒருசாதியாராகவே இருந்தமையாலும் அம்மூவரும் மூவேந்தர் எனச் சிறப்பித்துக் கூறப்பட்டார்கள்.

இவருள் சேர நாட்டை ஆண்டவர்கள் சேரர் எனவும் சோழ நாட்டை ஆண்டவர்கள் சோழர் எனவும் பாண்டி நாட்டை ஆண்டவர்கள் பாண்டியர் எனவும் பெயர் வழங்கப்பட்டு வந்தார்கள்.

'பூழிய வைதியன் கொங்கன் பொறையன்
வானவன் குட்டுவன் வானவரம்பன்
வில்லவன் குடநாடன் வஞ்சிவேந்தன்
கொல்லிச் சிலம்பன் கோதை கேரளன்
பொருநைத் துறைவன் போந்தின் கண்ணியன்
மலையன் மலையமான் சேரன் பெயரே'

என்பதனுல் சேரன் பெயர்கள் அறியப்படுகின்றன.

'சென்னிவளவன் செம்பியன் கிள்ளி
பொன்னித் துறைவன் புலிக்கொடியோன் மால்
கோழிவேந்தன் நேரி வெற்பன்

ஆலின் கண்ணியன் நேரியன் அபயன்
சூரியன்புனனுடன் சோழன் பெயரே
கேசவன் என்பதும் ஆங்கவன் மேற்றே"

என்பதனுல் சோழன் பெயர்கள் அறியப்படுகின்றன.

'செழியன் கூடற் கோமான்றென்னவன்
வழுதி மீனவன் பஞ்சவன்மாறன்
கௌரியன் வேம்பின் கண்ணியன் கைதவன்
மலைப் பொருப்பன் வைகைத் துறைவன்
குமரிச்சேர்ப்பன் கோப்பாண்டியனே'

என்பதனுல் பாண்டியன் பெயர்கள் அறியப்படுகின்றன.

இம்முந்நாடும் குமரி முதல் வேங்கடமலை வரை பரப்பு உடையதாகும். 'வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து' எனத் தமிழ்நாட்டிற்கு எல்லை தொல்காப்பிய சிறப்புப் பாயிரத்துட் கூறப்பட்டது.

'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்' என மூவரசரது நாடு தொல்காப்பியத்துள் கூறப்பட்டுள்ளது.

மூவர்க்கும் உரிய மலை முதலியன

இவர்களுடைய மலை முதலியவற்றை (திருவள்ளுவ மாலையில்) சீத்தலைச்சாத்தனுர்

'மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியும்
மும்முரசு முத்தமிழு முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர் தா முரமேற்ருன்ரு
பாமுறைதேர் வள்ளுவர் முப்பால்'

என்னும் பாட்டில் குறிப்பிடுகின்ருர்.

மும்மலை - கொல்லி, பொதியம்; முந்நாடு - சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு; முந்நதி-பொருநை, காவிசி, வையை; முப்பதி—கருவூர், உறையூர், மதுரை; மும்முரசு—மங்கலமுரசு, வெற்றிமுரசு கொடைமுரசு (இவை மூவேந்தர்க்கும் ஒப்ப உரியவை) முத்தமிழ்—இயல் இசை நாடகம் (இவையும் மூவேந்தர்க்கும் ஒப்ப உரியவை) முக்கொடி-வில், புலி,மீன் குறிகள் உடையன; மும்மா-பாடலம், கோரம் கனவட்டம்; மும்மாலை—பனைமாலை, ஆத்திமாலை,வேப்பமாலை என்பன.

சேரநாடு மலைநாடு எனவும் சோழநாடு புனல்நாடு எனவும் பாண்டிய நாடு தமிழ்நாடு எனவும் இலக்கியங்களில் கூறப்படுகின்றன. சேரநாட்டின் மலைமிகுதி புலவர்களால் பலவிடங்களிலும் நயம்பட விளக்கப்படுகின்றது. புகழேந்திப்புலவர்,

'வென்றிநிலமடந்தை மென்முலைமேல் வெண்முகில் போல்
குன்றருவி பாயுங் குடநாடன்' (நள-சுயம்)

எனச் சேர நாட்டு மலைகளை அந்நாடாகிய பெண்ணுக்குரிய கொங்கைகளாகக் கூறும் அழகு நுகரத்தக்கது.

'மலைநாடுகளையும்......சோழபாண்டிய தேசங்களையுங் கண்ணன் வென்றான்' (பாரதம்—துரோண)

கீழ்நாட்டுவீரர்களும் மலைநாட்டு வீரர்களும் வசாதிகளும் (கருட வியூகத்தின்) பின்புறத்தில் நின்றார்கள். (பாரதம்—துரோண)

"கேசவனாலே, அரசனான தன் பிதாவும்யுத்தத்தில்கொல்லப்பட்டுப் பிறகு பாண்டியர்களுடைய கபாட புரமும் பிளக்கப்பட்டு உறவினர்களும் தங்கள் தங்கள் ஸ்தானத்தை விட்டு ஓடிப்போன சமயத்தில் பீஷ்மரிடத்திலிருந்தும் அவ்வாறே துரோணரிடத்தில் நின்றும் பரசுராமனிடத்தில் நின்றும் கிருபாசாலியனிடத்தில் நின்றும் அஸ்திரத்தைப் பெற்று அந்த அஸ்திரங்களாலே ருக்மி கர்ணன் அர்ச்சுணன் அச்சுதன் இவர்களோடு ஒப்புமையைப் பெற்றுத் துவாரகையை நாசம் பண்ணுவதற்கும் பூமி முழுதையும் ஜயிப்பதற்கும் விரும்பினவனும், கற்றறிந்தவர்களான ஸ்நேகிதர்களால் நன்மையைக் கருதி அவ்வித முயற்சியிலிருந்து தடுக்கப்பட்டுத் தொடர்ச்சியான வைரத்தை விட்டுத் தன் ராஜ்யத்தை ஆண்டு வருகிறவனும் பலசாலியுமான சாகரத்துவஜ பாண்டியன், சந்திர கிரணங்கள் போன்ற நிறமுள்ளவைகளும வைடூரிய மிழைந்த விரிப்புக்களால் மூடப்பட்டவைகளுமான குதிரைகளோடு பராக்கிரம மென்ற பொருளைக் கைப்பற்றித் திவ்யமான தநுஸை நாணேலி செய்துகொண்டு துரோணரை எதிர்த்துவந்தான்" (பாரதம்—துரோண)

என்பவற்றால் சேர சோழ பாண்டியர்கள் பாரத காலத்திலேயே 5000 ஆண்டுகட்குமுன்) வீறுபெற்று விளங்கிய வேந்தராவர் என்பது விளங்கும். இன்னும், அதற்கு முற்பட்ட இராமாயண காலத்தும் இவர்

கள் பெருமை பெற்று விளங்கினதாக வால்மீகி இராமாயணம் கூறு-கின்றது. சுக்கீரிவன் சீதையைத் தேடிக் காணும்படி வானரங்களை அனுப்புகையில், 'நீங்கள் சேர சோழ பாண்டிய தேசங்களிலும் சென்று தேடுங்கள்' என்றதாக வால்மீகி இராமாயணம் கூறுகின்றது.

இதனால், இராமாயண காலத்திற்கு முன்பே மூவேந்தரும் முத்தமிழும் சிறந்திருந்தன என்பது பெறப்படும்.

பரசுராமர் இராமாயணகாலத்திருந்தவர். முந்நாடுகள் இராமாயணத்தில் குறிப்பிடப்படுதலால், 'கேரளத்தைப் பரசுராமர் படைத்தார்' என்பது குருட்டுக்கதையாகும். பரசுராமருடைய அண்ணவராகிய திரணதூமாக்கினி முனிவரே தொல்காப்பியர் என்பது நச்சினார்க்கினியர் கொள்கை. தொல்காப்பியம் பரசுராமர் தவத்துக்கு முன்பே உண்டாகிய தொரு நூலாகக் கொள்ளப்படுகிறது. அத் தொல்காப்பி-யத்திலும், 'வண்புகழ்மூவர் தண்பொழில் வரைப்பின்' என்பது முதலாகப் பல இடங்களில் முத்தமிழ்நாடு சுட்டப்படுகின்றமை-யாலும், பரசுராமர் கேரளத்தைப் படைத்தது படைத்துமொழிக் கிளவியாம்.

தொல்காப்பியர் அகத்திய முனிவருடைய பன்னிருமாணுக்கருள் ஒருவர். பரசுராமர்க்கு முற்பட்டவர் அகத்தியர் என்பதில் எவர்க்கும் மாறுபாடு இல்லை. அவர் பிரமனது யாக கும்பத்தினின்றும் தோன்-றினவர் என்றும் முதல் ஏழு முனிவருள் ஒருவர் என்றும் புராணங்கள் கூறுகின்றன சிலர் அகத்தியரைத் தமிழ்நாட்டிற் பிறந்தவர் என்றுங் கூறுவர். அவ்வகத்தியர் செய்த அகத்தியம் என்னும் நூலிலும் முந்நாடும் முத்தமிழும் குறிக்கப்பட்டிருக்கின்றனவாகையாலும், பரசுராமர் கேரளத்தைப் படைத்தது முயற்கொம்பே.

ஆயினும், பரசுராமர் காலத்துச் சேரநாட்டில் பார்ப்பார் செல்வாக்கு மிகுதியாயிருந்தது என்பதும் பரசுராமர் அரசரை வயப் படுத்தித் தம் அதிகாரங்களை நிறுவினர் என்பதும், வேண்டுமேல் கொள்ளப்படல் ஆகும். கேரளத்தைப்பரசுராமர் பார்ப்பார்க்குத் தானம் செய்தார் என்பதற்கு ஆங்குப்பார்ப்பார் சிலரைக் குடியிருத்தி அவர்க்கு இடங்களும் அதிகாரங்களும் அரசர் உடன்பாட்டுடன் அளித்தார் என் பதே பொருளாகல் வேண்டும். கேரளத்தைத் 'தருமராச்சியம்' என்பது பரசுராமர் அந் நாட்டைப் பார்ப்பார்க்குத் தானம் செய்ததுபற்றி அன்று; கேரளவரசர் தருமங்காத்து வருவது பற்றியே ஆகும் என்க.

'தமிழ்' என்பது முறையே வல்லின(த) மெல்லின(மி) இடையின(ழ்) எழுத்துக்களால், மொழியின் அமைதிக்கேற்ப அமைந்ததொரு இயற்பெயர். தமிழ் என்பதற்கு இனிமைஎன்றும் பொருளுண்டு. 'தமிழ்ப் பாட்டு இசைக்குந்தாமரையே' எனக் கம்பர் கூறுவது காண்க. 'திரவிடம்' என்பது 'தமிழ்' என்பதன் திரிபு என்பது ஆராய்ச்சியாளர் பலரும் ஒப்புக்கொண்டது.

'சேரல்' என்பது, 'அலங்கல் தொடையல்' என்பன போலத் தொழிலாகுபெயராய் மலைசேர்ந்த நாட்டின் பெயராயிற்று. சிலபோழ்து இச்சொல் இருமடியாகு பெயராய்ச் 'சேரன்' என்ற பொருளிலும் நார்முடிச்சேரல்' என்பது காண்க. 'சேரல்' என்னும் மலைநாட்டை உடையவன் 'சேரலன்' எனப்படுவான். சேரர்க்கு இப்பெயரே நூல்களில் மிகுதியும் வழங்கப்பட்டு வருகின்றது. 'ச' என்னும் எழுத்திற்கு நேராக 'க' என்னும் எழுத்து பல சொற்களில் வருகின்றது. சீரை கீரை என்பது காண்க.

இம்முறை பற்றிச் 'சேரலன்' என்பது 'சேரலன்', 'கேரளன்' எனத் திரிந்து வழங்கப்பட்டது. வடமொழியில் 'ல' கர 'ள' கரங்கட்கு வேற்றுமை இல்லை. 'லளயோ ரபேத:' என்பது சூத்திரவிதி. கேரளன் ஆள்வது கேரளம் ஆம். இவ்வாறு நேரிதில் பெறப்படும் மொழிக்கு மொழியுண்மையறியாத பலரும் பலவாறு பொருள் கூறினர். கேரம் தேங்காயாகி அதற்கு நம் நாடு அளமாகிக் கேரளமாயிற்று. 'கேரம் வடமொழி 'அளம்—தமிழ் இவற்றின் புணர்ப்பும் பொருத்தம் அன்று. அளம் என்பதன் பொருள் அறியாது வாய் வந்த கூறினர் அன்னர். 'அளம்' என்பது உப்புவிளை நிலத்தைக் குறிக்கும். அது இடப் பொதுச்சொல்லன்று. களமாயினும், ஒருவாறு பொருந்தும்.

இதுபோலவே 'மலையாளம்' என்னும் சொல்லும் தகுதியற்ற நெறியில் பொருள்கொள்ளப்படுகிறது. மலை ஆழி-இவற்றிற்கு இடைப்பட்டது மலையாளமாம். எவையேனும் இரண்டொரு சொற்கள் கிடைத்தால் அவற்றைப் பொருத்தமின்றி, உள்ளம் சென்றவாறு இணைத்து வழுப்பொருள் கொள்வது மொழி அறியாதார் இயல்பு அவர்களுக்கு அவர்கள் கூறுகிற 'திராவிட'மும் தெரியாது; நாம் கூறுகின்ற தமிழும் தெரியாது. என்செய்வது? கலையாளர், அந்தணாளர், புலனாளர், நிலையாளர், வேளாளர் முதலிய சொற்களில் அவர்களுக்கு 'ஆழி' கிடைக்கவில்லை. 'ஆழி' ஆளமாவது எவ்வாறு என்றும் நம்

அறிவுக்கு விளங்கவில்லை. நிலையை ஆள்வார் நிலையாளர். அந்தன்மையை ஆள்வார் அந்தணர் என்றாற்போல மலை (நாட்டை) ஆள்வார் மலையாளர். மலையாளரால் ஆளப்படுவது மலையாளர். மலையாளரால் ஆளப்படுவது மலையாளம். (தொல்காப்பியன்செய்தது தொல்காப்பியம், பனம்பாரன் செய்தது பனம்பாரம் என்றாற் போல இதுவும் தற் சிறப்புப் பெயர் (தத்தி தாந்த நாமம்)

'ஆதிசேரர்' என்று கூறத்தக்கார் சிலர் இருந்தனர் எனவும் அவர்களுடைய காலத்திற்குப்பின் சேர குலம் அழிந்தது எனவும் ஆகவே கொங்கு நாட்டரசனைச் சேர நாட்டிற்கு அரசனாக்கினர் குடிகள் எனவும் சிலஆராய்ச்சியாளர் கூறத்தொடங்கி இருக்கின்றனர். 'கொங்கர் காவலன்' என்பது முதலியன சேரர் கொங்கு நாட்டையும் அரசாண்டதையே குறிக்கும். அதுபற்றியே சேரநாட்டுடன் கொங்கு நாட்டையும் ஆண்டனர் சேரர் என்பதைக் குறிப்பிக்கச் சேரரைக் 'கொங்கர்' என்பாராயினர். கொங்குநாட்டரசரே சேரர் என்பது, நூற்சான்று கிடையாத சேய்மைக்காலத்தில் நின்றுகொண்டு கூறுவதாகும். அதுபயனற்ற யூகையாம். 'ஆதிசேரர்' எனப்படுவாரது புகழொடு சார்த்தியே பிற்சேரர்களும் புகழப்படுகின்றனர்.

'அலங்குளைப் புரவி ஐவரொடு சினை இப்
பொலந்தலைக் கொண்டபொற்பூந் தும்பை
ஈரைம்பதின்மரும் பொருது களத்தொழியப்
பெருஞ்சோற்று மிகு பதம் வரையாது கொடுத்தோய்.
—(புறம்)

என்பது சேரநாட்டில் நிகழ்ந்ததொரு உள்நாட்டுப் புரட்சியையும் அதன்கண் மறுதலைப்பட்ட இருபாலார்க்கும் பெருஞ்சோற்றுதியன் சோறளித்ததையும் குறிக்கின்றது என்பர்சிலர், சிலர் சேரன் பாண்டவ கௌரவர்களைச் சார்ந்த படைகட்குச் சோறளித்ததைச் குறிக்கு-மென்பர்.

குடிவரவு : இவர்களது குடி எப்பொழுது தோன்றிற்று என்று விளக்கும் சான்றுகள் அகப்படவில்லை. ஆயினும் இவர்கள் குடி படைப்புக் காலந்தொடங்கி வரும் பழமை உடையது என்பர்.

'வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற்றலைப்பிரித லின்று'.

என்னுந் திருக்குறளின் உரையில், 'பழங்குடி' என்பதற்குத் 'தொன்று தொட்டுவருகின்ற குடி' என்று கூறித் தொன்று தொட்டு வருதல் (ஆவது) சேர சோழ பாண்டிய ரென்றாற்போலப் படைப்புக் காலந்-தொடங்கி மேம்பட்டுவருதல்' என்றார். இஃது எங்ஙனம் ஆயினும் இவரது குடி தொல்குடி என்பது மறுக்கப்படவில்லை.

மூவேந்தர் தம்முள் பலவிடங்களிலும் மாறுபட்டுப் பொருதமை-யாலும் வேளிர் பிறநாட்டு அரசர் என்பாருடைய படைஎடுப்பினாலும் அவர் நாளடைவில் பண்டைச் சிறப்புநீங்குவராயினர். சோழபாண்டியர் மரபுகள் அழிந்தபின்னும் அழியாது இன்றுகாறும் நிலைபெற்றுவரும் சிறப்பு உடையது சேரர் மரபு ஒன்றேயாம். இதனால், அவரது குலத் தூய்மையும் குலநன்மையும் நல்வினைப்பயனும் பெருமையும் புகழும் அறியப்படுகின்றன.

## சேரநாடு

'சேரநாடு மிகப் பரந்ததொன்று. போர்வகையால் அது பலபோது மிகுந்தும் குறைந்தும் வந்திருக்கிறது. பழைய சேரநாடு கருவூர்ப்பிரதேசமுட்படக் கோயம்புத்தூர், சேலம், நீலகிரி சில்லாக்களும் மைசூர் நாட்டின் தென் பகுதியும் மேற்குத் தொடர்ச்சிமலை நெடுக உள்ள பக்கங்களுமாம்' எனச் சேரன் செங்குட்டுவன் என்றார் ஆராய்ச்சி நூல் கூறுகின்றது.

> 'வடக்குத்தலம் பழனி வாழ் கீழ் செங்கோடு
> குடக்குத் திசை கோழிக் கோடாம் கடற்கையின்
> ஓரமது தெற்காகு மோண் பதின்காதம்
> சேரநாட்டெல்லையெனச் செப்பு'

என்ற பாடல் பிற்காலத்துச் சேரநாட்டு எல்லையைச் செப்புகின்றதாம்.

சேர அரசர்க்கும் 'குட்டுவன்'என்றதொரு குடிப்பெயர் வழங்கி வந்திருக்கிறது என்பது, 'செல்கெழுகுட்டுவன்' குட்டுவன் கோதை செங்குட்டுவன்,' குட்டுவன் சேரல்' முதலிய பெயர்களால் விளங்கும். குட்டுவன் என்பது குட்டநாட்டை ஆண்டதனால் வந்த பெயர். குட்டநாடு சேரநாட்டின் ஒருபகுதியேயாயினும் சேரர் குட்ட நாட்டில் தொடர்பு மிக்கவராயிருந்தனர் என்பதற்கு இப்பெயர் சான்றாகும். குட்டம் என்பதற்கு ஆழம் என்பது பொருள் அந்நாடு. பள்ளப்பாங்கிற்றாயிருப்பதனால் அப்பெயர்த்து ஆயிற்று என்று கொள்ள லாம். கோட்டயத்துக்கும் கொல்லத்துக்கும் இடையே பாலையாற்றால்

பல ஏரிகளும் தீவுகளு முண்டாயின பற்றிக் குட்டநாடு எனப் பெயர் வந்தது எனச் சிலர் கூறுவது ஆராயத்தக்கது. குட்டநாடு கொடுந்தமிழ் நாடாகையால் அந்நாட்டுத்தமிழ் சில வேறுபாடுகள் எய்தி வழங்கலாயிற்று.

இவற்றைச் சேர நாட்டில் கொச்சியும் மலைவாரமும் (Malabar) திருவாங்கூரும் மலையாள மொழி வழக்குடையன ஆயின. திருவாங்கூரின் தென்பகுதியாகிய நாஞ்சி நாட்டிலும் அதனையடுத்துள்ள சில நாடுகளிலும் மட்டுமே தமிழ் வழக்கு உள்ளது.

## வஞ்சி

வஞ்சி என்பது கருவூர் என்றும் அதுவே திருவஞ்சைக்களம் என்றும் பலர் கூறுகின்றனர். சேரர் தலைநகரம் திருவஞ்சைக்களம் என்றே பெரியபுராணம் கூறுகின்றது. 'வஞ்சி சேரரது தலைநகரம் எனச் சங்கநூல்கள் பரக்கக்கூறும். சேரர்க்குக் கொடுங்கோளூர் முதலிய பிற தலைநகரங்களும் உள என்பது வேறிடத்தும் விளக்கியிருக்கிறேம். 'மாகோதை' என்பது திருவஞ்சைக் களத்தையடுத்த கொடுங்கோளூர்க்குப் பெயர் என்பர். எனவே வஞ்சிதேசம் என்பது வஞ்சியை உள்ளிட்ட சேரநாடாம்.

இஃது உணராத மலையாளர் 'வஞ்சி' என்பது வள்ளம் எனக் கொண்டு வள்ளங்கள் மிகுந்தது பற்றி வஞ்சிநாடு ஆயிற்று என்பர். இது கேரம் (தெங்கு) மிகுந்தது கேரளம் என்பது போல்வது ஓர் பேதைமையேயாகும். வள்ளம் என்பது படகு என்னும் பொருளில் மலைமொழியில் வழங்கிவருகிறது. கிண்ணம் போலக் குழிந்து காணப்படுவதனல், படகுக்கு வள்ளம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். 'வள்ளம்' 'வஞ்சி' என்பனவற்றிற்குப் 'படகு' என்றபொருள் தமிழில் இல்லை. சேரநாடுக் காயல்கள் (கழிகள்) மிக்க நாடாகையால் படகுகளின் போக்குவரத்து மிகுதியாக இன்றும் நிகழ்ந்து வருகிறது. நாளடைவில் வஞ்சி நாட்டுப் படகுகளுக்கு 'வஞ்சி' என்ற பெயர் வழங்கியிருக்க வேண்டும். திருவனந்தைக்கோயில் செல்வப் பேடகத்திற்கு 'வஞ்சி' என்ற பெயர் வந்தமை இதன்கண் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறேம், இற்றைச் சேரநாட்டின் பெரும்பகுதி திருவாங்கூரில் அடங்கினமையால் வஞ்சிநாடு என்ற பெயர் திருவாங்கூர்க்கே வழங்கப்பட்டு வந்தது.

"அலைகட னெடுந்துகி லந்தநா டெனும்
தலைமகள் தனக்குவான் தடவு குன்றுபூண்
முலையென விளங்கின முகத்தில் தீட்டிய
திலகமே யானது திருவஞ்சைக் களம்"

என்னும் திருவிளையாடற் புராணச் செய்யுளாலும் சேரமான் பெருமாள் நாயனர் திருவஞ்சைக்களத்திருந்தமை பெறப்படுகின்றது. எனவே, நாயனர் கொடுங்கோளூரில் இருந்து அரசாட்சி நிகழ்த்த வில்லை என்று தெரிகிறது. அவர் திருவஞ்சைக்களத்தில் இருக்கும்பொழுதுதான் சிவபெருமான் பாணபத்திரனிடம் திருமுகம் கொடுத்து உய்த்தது.

திருவஞ்சைக்களம் அறச் செல்வமும் பொருட் செல்வமும் நீதி அமைந்த வீரச் செல்வமும் வடமொழிச் செல்வமும் தென்மொழிச் செல்வமும் சிறக்கப் பெற்றது.

சேரர் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லவர் என்பதற்கு மேற்கூறிய பொருள்படப்பரஞ்சோதியார் அருளிய பாடல் சான்ருகும். அப் பாடல் வருமாறு:—

'அறமக ளாக்கமு மலரின் மேயசெந்
திறமக ளாக்கமும் நீதிசான்றே போர்
மறமக ளாக்கமும் வடசொல் தென்கலைத்
திறமக ளாக்கமுஞ் சிறந்த தந்நகர்'.

(திருவிளை.42 பட)

வஞ்சி என்பது பேரியாற்றங் கரைக்கண் உள்ள கரூர் எனச் சிலரும் திருச்சிராப்பள்ளி சில்லாவைச் சார்ந்த கருவூர் எனச் சிலரும் கூறுவர். 'காவிரியன்றியும் காவிரி புனலொரு — மூன்றுடன் கூடிய கூடலனையை' எனப் பரணன் சேரன் செங்குட்டுவனை உவமித்திருப்பது காவிரியும் மணிமுத்தா நதியும் ஆன்பொருநையும் கூடும் கூடலையே' என திரு. ரா. இராகவையங்கார் அவர்கள் கூறுவர். எனவே, கருவூர் என்பது அம் மூன்று நதிகளையும் பக்கத்தே உடையது என்பதும் அதுவே திருச்சிராப்பள்ளி சில்லாவின் குள்ளக் கருவூர் என்பதும் அவர் கொள்கை. அதுவே சேரருடைய பழைய தலைநகரம் என்பதற்கு அவர் பல அரிய சான்றுகளையும் எடுத்துக் காட்டினர். காவிரி யன்றியும் காவிரிபுனலொரு மூன்று என்பதனல் அம் மூவாறுகளும் காவிரியை நீங்கியனவாக வேண்டும். எனவே காவிரியைச் சேர்க்கு-

மிடத்து நான்கு ஆறுகளாம். எனவே ஒன்றுடன் கூடிய கூடல் மேற் கூறிய மூவாறுகளின் கூட்டமேயாகும் என்று கொள்வதற்கு இட-மில்லை. காவிரியைக் கங்கைக்கிணைப்பாகக் கூறுவர். எனவே அது கங்கை போலும் புண்ணிய நதியாகும். 'காவிரி புனல் ஒரு மூன்று' என்பது கங்கை யமுனை சரசுவதி என்னும் மூவாறுகளாம். இவற்றின் கூட்டம் திரிவேணி சங்கமம் எனப்படும். இத் திரிவேணி சங்கமம் மிகப் புண்ணியம் பயப்பது என்று புராணங்களால் சொல்லப்படு-கிறது ஆகவே, 'நீ காவிரியும் திரிவேணி சங்கமும் ஆகிய இவற்றால் உண்டாம் புண்ணியத்தைப் போன்றவன்', என்பதே 'காவிரிஅனையை' என்பதன் பொருளாக வேண்டும். அரசரைச் சிறப்பிக்கும் முறையில் இப் பொருள் சிறந்து காட்டுவதும் உணரத் தக்கது.

இங்ஙனமாயினும் திரு ஐயங்கார் அவர்கள் கூறும் பிற ஆராய்ச்சி நுட்பங்கள் அவரால் கூறப்படும் கருவூரே சேரர்க்குப் பழைய தலைநகரமாக இருந்திருத்தல் வேண்டும் என்பதை வற்புறுத்தும் மிகப்பரந்த சேரநாட்டிற்குச் சோழ நாட்டையடுத்த கருவூர் தலைநகராக இருப்பது வியப்பும் அன்று. கருவூரைப் பிற்காலத்துச் சோழர்க்கு உரிமைப்படுத்திப் பலநூல்கள் கூறுவதற்குக் காரணம் சேரர்தம் பழைய தலைநகரை மாற்றிக் கொண்டதேயாகும். போர் காரணமாகச் சேரர் அத் தலைநகரத்தை விட்டு நீங்க வேண்டுவ-தாயிற்று. சேரன் செங்குட்டுவன் காலத்துக்கு முன்பே திருவஞ்சைக் களமும்கொடுங்கோளூரும் அரசர் உறைவிடங்களாகஅமைந்தன என்று கூறவேண்டும். சேரன் செங்குட்டுவன் காலத்துக்குச் சிறிது அடுத்த காலத்தில் அரசேற்ற சேரமான் பெருமாணயனர் திருவஞ்சைக்களத்-திலிருந்ததாகவும் அவர் தந்தையார் செங்கோற் பொறையர் கொடுங் கோளூரில் இருந்ததாகவும் பெரியபுராணம் கூறும். திருவிளையாடற் புராணமும் திருவஞ்சைக்களத்தில் நாயனர் இருந்ததாக அறிவிக் கின்றது. ''மாவீற்றிருந்த பெருஞ் சிறப்பின் மன்னுந்தொன்மை மலை நாட்டு கொடுங்கோளூர்'' எனக் கொடுங்கோளூரின் பழமையைப் பெரியபுராணம் விளங்குகிறது.

செங்குட்டுவன் மலைவளம் காண்குவம்' எனக் கருதிப் பேரி-யாற்றங்கரையில் தங்கி இருந்தபோது சாத்தனர் அவ்வரசரைச் சென்று கண்டசெய்தி சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்றது. கருவூரில் அவரைக் காண விரும்பிய புலவர் முந்நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள பேரியாற்றங்கரைக்கு அரசரைக் காணச் சென்றார் என்பதும்

அரசர் மலைவளம் காண்பதற்காக அடுத்ததோரிடம் செல்லாது முந்நூறு மைல்கடந்து பேரியாற்றங்கரைக்குச் சென்ருர் என்பது வியப்பாகவே தோன்றும் சிலப்பதிகார மொழிப்போக்கை நோக்கு மிடத்து, செங்குட்டுவன் பேரியாற்றின் பக்கத்ததோர் ஊரிலேயே அரசு செலுத்தியிருக்க வேண்டும் என்று தோன்றும். சேரநாட்டின் பகுதியாகிய திருவாங்கூர் வஞ்சிநாடு எனப்பெயர் பெற்றிருப்பதும் வஞ்சி என்னும் ஊர் அந்நாட்டின் பக்கத்ததாக இருக்கவேண்டும் என்று கருதஇடம் தருகின்றது. பதிற்றுப்பத்தில் பேரியாறு சேர அரசரோடு தொடர்புபடுத்திப் பல இடங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. பிறநூல்களும் பேரியாற்றைச் சேரநாட்டுக்கு உரிமைப்படுத்தி உரைக்கும். இன்னோரன்னவை கொச்சியை அடுத்த கருவூரே வஞ்சி என்று சிலர் கூறுவதற்கு இடங்கொடுத்தன. பொருநையாற்றை வஞ்சியொடு தொடர்புறுத்தி நூல்கள் கூறுகின்றமையால், பெரியாறே பொருநை என்று சிலர் கூறுவாராயினர். பெரியாற்றுக்குப் பொருநை என்ற பெயரில்லை. எனவே, சேரரது சிறந்த தலைநகரமாகிய வஞ்சியைப் பொருநையொடுபடுத்துக்கூறிய புலவர் சேரரது தென்பால் விளங்கிய தலைநகரங்களொடு படுத்துப் பேரியாற்றைக் கூறியிருக்க வேண்டுமென்று கருதலாகும். அத் தலைநகரங்களில் ஒன்று கொச்சி-கருவூர் ஆகக்கூறும்.

திருவாங்கூர் : இப்பெயர் வந்ததற்குப் பலர் பல காரணங்கள் கூறுவர். திருமகள் வாழும் நாடாதலால் திருவாழுங்கூறு என வந்த பெயர் மருவித் திருவாங்கூர் ஆயிற்றென்பது சிலர் கொள்கை. ஆங்கூர் என்பதொரு ஊர் சேரநாட்டில் தென்பால் இருந்ததென்றும் அதில் வேள் அரசாட்சி நிகழ்ந்ததென்றும் அவ்வரசாட்சி பற்றி ஆங்கூர் உள்ளிட்ட பெருநிலமும் திருவாங்கூர் எனப்பெயர் பெற்றது என்றும் வேறு சிலர் கருதுவர். ஆதன் அவினிசெல்வக் கடுங்கோ வாழியாதன், ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் நெடுஞ்சேரலாதன் உதியஞ்சேரலாதன் என வருதலால் ஆதன் என்பது சேரர் குடிப் பெயரென்றும் பிற்காலத்தில் ஒருசேரலாதற்கு அளிக்கப்பட்டகூறு ஆதலால் அக்கூற்றம் ஆதன்கூறு என்ருகித் திரு என்னும் அடைமொழியொடு புணர்ந்து திருவாதன்கூறு என வந்தது என்பது எமது கொள்கை. திருவாதாங்கூர் என்னும் படி வழக்கும் இதற்கு ஒரு சான்ருகும். திருவாதாங்கூர் என்பது திருவாதன்கூறு என்பதன் மரூஉ எனக்கேட்ட அளவிலே விளங்கும். திருவாங்கூர் என்பதும் திருவா

(தன்)ங்கூறு என்பதன் மரூஉ. 'கூறு' என்பது மலையாள மொழியில் 'கூர்' எனத்திரிந்தது. அவ்வாறு திரிவது மலைமொழி. வழக்காறு என்பது 'கயிறு—கயர்; பயறு—பயர்; வேறுபாடு—வேர்பாடு; திரு வாட்டாறு—திருவட்டார்; வயிறு—வயர்' என்பவற்றால் உணரப்படும். இன்னும் இவை போன்ற பல மொழிகள் சான்றுகளாகக் காட்டலாகும் இது ஆன்றோர்க்கும் பொருந்துவதாகத் தோன்றும் கோதை என்பது எமது கருத்து. சேர மரபினர்க்கு மாந்தரன் பொறையன், சேரல் ஆதன் முதலிய பல பெயர்கள் குடிப் பெயர்களாக வழங்கி வந்தன.

'திருவாங்கோடு' என்றதோர் ஊரில்சேரர் அரண்மனை செய் திருந்தமையால் திருவாதன்கோடு. அப்பெயரே நாட்டிற்கும் பெய ராயிற்று என்று கருதித் திருவாங்கோட்டு ராஜ்யம் என மலையாளத்தில் பலர் எழுதிவந்தார்கள் அவ்வழக்கம் நீங்கி வருகின்றது. 'திருவாங் காடு'' 'திருவிதாங்கோடு என்றே பெரும்பாலும் வழங்கி வருகிறது. ஆகவே, அதுவும் திருவாதன்கோடு என்பதன் மரூஉ எனவிளங்கும் 'கூறு' என்னும் பொருளில் சேரநாட்டில் பலபகுதிகள் கூற்றம் எனக் கூறப்பட்டு வந்தன. 'சொல்லிக்கூற்றம்' முதலிய சொற்களை நோக்குக முத்தூர்க்கூற்றம் என்பதினுற்போல் எனவும்காண்க. கூற்றம் என்னும் வழக்கு நோக்குமிடத்துத் திருவாதன்கோடு என்பதைவிடத் திருவாதன் கூறு என்பதே நாட்டின் பெயர் ஆவதற்குப் பொருந்துவதாக உள்ளது.

திருவனந்தபுரம்: சேரநாட்டின் தலைநகராகச் சங்ககாலத்து விளங்கியது வஞ்சி என்பது. ஆயினும், சங்ககாலத்திலேயே திருவனந்த புரத்தையும் தென்பால் ஆட்சிப் பொருட்டுக் கிளைத் தலைநகராகச் சேரர் கொண்டிருந்தனர் என்று கருத இடமுள்ளது. அரசிளங்குமரர் திருவனந்தபுரத்திலிருந்து அரசியலில் ஈடுபட்டு வந்தனர் என்பது சிலர் கொள்கையாக இருந்துவருகிறது. பழைய நூல்களில் திருவனந்த-புரத்தைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வாறிருக்க-ஏறத்தாழ இருநூறு ஆண்டுகட்கு முன்னர் மார்த்தாண்டவர்மாஎன்னும் அரசர் பிரான் காலத்து திருவனந்தபுரம் காடாயிருந்தது எனவும் அதற்கு அனந்தன்காடு என்பது பெயர் என்வும் சீபதுமநாபன் அக் காட்டில் அவ்வரசர்க்குக் காட்சிகொடுத்ததே அப்பெயர் உண்டாவதற் குக் காரணம் எனவும் பலர் கூறுவதை எவ்வாறு கொள்ள முடியும்? 'அனந்தகாடு' என்பதொன்று இருந்திருப்பினும் கோயில் குலசேக-ராழ்வார் காலத்துக்கு முன்னரே அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

என்பது உய்த்துணரல் ஆகும், ஆயினும் குலசேகரர் திருவனந்தை இறையைப் பாடவில்லை. மலைநாட்டுத் திருப்பதிகளில் 'வித்துவக்-கோடு' என்னும் திருப்பதி ஒன்றே அவரால் பாடப்பட்டது. அவர் உள்ளம் முழுவதும் திருவரங்கத்தே பதிந்து கிடந்தது. குலசேகரர் காலம் 7-8-ஆவது நூற்றாண்டு எனவும் 11-12-ஆவது நூற்றாண்டு எனவும் பலவாறு கூறுவர்.

நம்மாழ்வார் திருவனந்தை, திருவண்பரிசாரம், திருக்காட்-கரை, திருமூழிக்களம், திருப்புலியூர்க்குட்ட நாடு, திருப்புலியூர் திருச்செங்குன்றூர், திருநாவாய்க்களம், திருவல்லவாழ், திருவண்டூர், திருவாட்டாறு, வித்துவக்கோடு, திருக்கடித்தானம், திருவாறன் விளை என்றும் மலைநாட்டுத் திருப்பதிகளைப் பாடினர். இவர் காலம் 1200 ஆண்டுகளுக்கு முன் என்பர்.

நம்மாழ்வார் திருவனந்தையை 'தடமுடைவயல்அனந்தபுரநகர்' எழிலணி 'அனந்தபுரம்' ஏய்ந்த பொன்மதில் அனந்தபுரம்' எனக் குறிப்பிடுகின்றார் எனவே 'அனந்தபுரம்' என்னும் பெயர் மிகப் பழையதொன்றாகும் என்பது உரைப்படுகின்றது.

அனந்தபுரத்துச் சீபதுமநாபன் பள்ளிகொண்டு காட்சி தருவதை விளக்கும் பாடல் ஆராயத்தக்கது.

'கடுவினை களையலாகும் காமனைப்பயந்த காளை
இடவகை கொண்டதென்பர் எழிலணியனந்தபுரம்
படமுடையரவில் பள்ளி பயின்றவன் பாதங்காண
நடமினோ நமர்களுள்ளீர்' நாமுமக்கறியச் சொன்னோம்

என்பது காண்க.

சங்ககாலத்து நூலாகிய சிலப்பதிகாரத்தும் (1800 ஆண்டுகட்கு முன்னர்) திருவனந்தை குறிக்கப்பட்டிருப்பதாகக் கூறுவர்.

'குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென
ஆடக மாடத்தறிதுயில மர்ந்தோன்'

(சிலப்.26)

என்பதனுள், 'ஆடகமாடம்' என்பதற்குத் 'திருவனந்தபுரம்' என உரைகூறி 'இரவிபுரம் என்பாரும் உளர்.' என்கின்றார் அரும்பத உரையாசிரியர். பதிற்றுப்பத்தில் (பதிற்4·1) 'வண்டூது பொலிதார்

திருஞெமரகலத்துக்—கண் பொருதி திகிரிக்கமழ் குரல்—துழாய் அலங்கற் செல்வன் சேவடிபரவி—நெஞ்சு மலியுவகையர் துஞ்சுபதிப்பெயர என்ப தன் உரையிலும் திருவனந்தபுரம் குறிக்கப்பட்டிருக்கிறது'

'ஆடகமாடகம் என்பது திரிச்சிராப் பள்ளியை அடுத்தகருவூரில் உள்ள அரங்கநாதப் பெருமாள் கோயில் என்றும் அக்கோயிலில் திருமால் சயனக் கோல விக்கிரகம் ஒன்று கண்டெடுக்கப்பட்டிருக்கிறது என்றும் திரு. மு. இராகவையங்கார் அவர்கள் கூறுவர். ஒரு கோயிலில் எம்பெருமானுடைய பல வடிவ விக்கிரகங்கள் பல சிறப்புக்களின் பொருட்டுப் பயன்படுத்துமாறு அமைக்கப்படுவது வழக்கமாகையால் அச் சயனக்கோல விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டதொன்றே ஆடக மாடம் அரங்க நாதப்பெருமாள் கோயில் என்று துணிவதற்கில்லை. அரங்கநாதன் என்னும் பெயரால் அக்கோயிலில் எம்பெருமான் பள்ளிக்கோலமே முன்னர் அமைந்திருக்க வேண்டும் என்று துணியலாகும் திருவரங்கத்தில் எம்பெருமான்து பள்ளிக்கோலம் அமைந்திருத்தல் பற்றிப்பிற்காலத்தில் அரங்கநாதப் பெருமாள் கோயில் என்று வழங்கியிருக்கலாம் செங்குட்டுவன் மலைவளங்காணச் சென்ற சிறிது நாட்கெல்லாம் கொச்சி கருவூரிலாயினும் கொடுங்கோளூர் அஞ்சைக் களங்களிலாயினும் இருந்திருப்பின் திருவனந்தபுரத் திலிருந்து சிலர் பிரசாதத்தோடு அவ்வரசரைச் சென்று காணல் அத்துணை அரிதன்று. இனி திருவனந்தபுரம் எம்பெருமானது பள்ளிக் கோலமும் எம்பெருமானுக்கு உருமறையப் பொன்னால் அங்கிவேய்ந்து வருமவழக்கமும்'ஆடகமாடத்தறிதுயிலமர்ந்தோன்' என்பது திருவனந்தபுரம் திருமாலைச் சுட்டுவதற்குச் செல்வன ஆகும். சேரர்பழைய தலைநகரம் திருச்சி கருவூர் எனவும் அப்பெயரே பிற்காலத்துகொச்சி கருவூர்க்கும் வழங்கப்பட்டது எனவும் திருச்சிகருவூரை அடுத்த அரங்க' நாதப்பெருமாள் வடிவே திருவனந்தபுரத்துக் கோயிலிலும் அமைக்கப் பட்டது என்றும் கருத உள்ளம் முற்படுகின்றது.

சேரர்பெயர் :'பூழியன்' முதலாகப் பலபெயர்கள் சேரர்க்கு வழங்கி வந்திருக்கின்றன.

பூழியன்—பூழிநாட்டை உடையவன்.

உதியன்—'உதயன்' என்னும் வடசொல்திரிபு என்பர். உதயன் சூரியன். சேரர் சூரியவமிசச்சார்புடையவர் என்பர் சிலர். உதியன் இயற்பெயருமாம்.

கொங்கன்—கொங்குதேயத்தையும் ஆண்டவன்

பொறையன்—மலைச்சால்பு உடையவன் (பொறை-பொற்றை), ஆட்சியாகிய சுமையை (அரசபாரத்தை)த் தாங்கி ஆள்பவன் என்றுமாம். வானவன் மேலோன் வேருலக ஆட்சியையும் உடையவன் என்பாரும் உளர்-வானவரம்பன் என்பதற்கு தேவருலகு வரை ஆட்சி செலுத்தியவன் என்பர்.

குட்டுவன்—குட்டநாட்டை ஆண்டவன்.

குடநாடன்—குடநாட்டை ஆண்டவன்.

வில்லவன்—வில்லைக்கொடியடையாளமாக உடையவன்.

வஞ்சிவேந்தன்—திருவஞ்சைக்களத்தைத் தலைநகராகக் கொண்ட சேர நாட்டை ஆண்டவன்.

கொல்லிசிலம்பன்—கொல்லி மலையை உரிமையாக உடையவன்.
கோதை—'ஹோர?' என்ற வடசொல் திரிபு என்பர். (கோத.சூரிய வமிசத்தவன் என்பர் சிலர்) இயற்பெயருமாம்.
கேரளன்—சேரலன் என்பதன் திரிபு, சேரநாட்டையுடையவன் என்பது பொருள்,

மலையன்—மலைநாட்டை உடையவன்.

புகழ்

'தேடியோனன்ன நல்லிசை
ஒடியமைந்த'. (பதிற்-2—5)
'புலவரேத்த ஓங்குபுகழ்நிறீகி' (பதிற்—2-10)

அருள்

'பெரிய தப்புந ராயினும் பகைவர்
பணிந்து திறைபகரக் கொள்ளுநை' (பதிற்2-7)

அரசகுமாரர்

'ஒடுங்கோ ராதி ஒண்ணுதல் கருவில்
எண்ணியல் முற்றி ஈரறிவு புரிந்து
சால்புஞ் செம்மை யுளப்படப் பிறவும்
காவற்கமைந்த அரசு துறை போலிய
வீறுசால் புதல்வற் பெற்றனை.'
(பதிற்8—4)

என்பதனுல் சேரவரசர்கள் கருவிலேயே அரசர்க்குரிய குணங்கள் நிரம்பிப் பிறக்கின்றனர் என்பதுவும் அரசியல் தகுதி பயிற்சியால் அவர்க்கு வர வேண்டுவதன்று என்பதும் பெறப்படும்.

'கோ' என்னும் பெயர் அரச குமரர்முடிசூட்டினபிறகு அளிக்க, படுவதாகும் என திரு. U. V. சுவாமிநாதையர் அவர்கள் தெரிவிக்கின்றார்.

சேர நாட்டு இராச மாதேவியர் கற்பு

சேர அரசப் பெண்டிர் கற்பிற் சிறந்த பெண் தெய்வங்கள் ஆவர். அவரது கற்புக் கடவுட் கற்பு எனப்படுகின்றது.

காமர் கடவுளும் ஆளுங் கற்பின்
சேணுறு நணுநுதற் சேயிழைகணவ
(பதிற்-7-5)

எனக் கபிலர் செல்வக்கடுங் கோவைக் கூறுவதறிக.

பெண்மை சான்று பெருமடனிலேயிக
கற்பிறை கொண்ட கமழுஞ்சுடர் நுதல்
புரையோள் கணவ! பதிற். 8(7·10)

என்பதும் கபிலர் அவ்வரசனைப் புகழும் முகத்தால் அவன் தேவி கற்பை விதந்ததாம்.

சேரர் யானைச்சிறப்பு

சேர நாடு யானைக்குச் சிறப்பு உடையது. அது மலைநாடாக இருப்பதனுல், வேறு எவ்வேந்தரும் சேரர் யானைச்செல்வம் எய்திற்றிலர்.

'மலையுறழ் யானைவான்றோய் வெல் கொடி
வரை மிசையருவியின் வயின் வயி னுடங்கக்
கடல் போல்தானைக் கடுங்குரல் முரசம்
காலுறு கடலிற்கடிய உரற
வேந்தே.' (பதிற்.7-9)

'அந்நாட்டு, யாடுபரந் தன்னமாவின்
ஆபரந்தன்ன யானையோன் குன்றே (பதிற்.8-8)

என்பதனுள், 'ஆக்கள் பரந்து செல்வதுபோல மிகுதியாய் வரிசையாய் யானைகள் பரந்து செல்லும் குன்றம்' என அரிசில்கிழார் பெருஞ்சேரலிரும்பொறையின் மலையை யானையொடுபடுத்துச் சிறப்பிக்கின்றனர்.

'கார்மழை முன்பிற் கைபரந்தொழுகும்
வான்பறைக் குருகி நெடுவரி பொற்பக்
கொல்களிறு மிடைந்த பல்தோர் தொழுதியொடு
நெடுந்தேர் நுடங்கு கொடியிலர் வரப் பொலிந்து
செலவு பெரிதினிது நிற்காணு மோர்க்கே'

(பதிற்.9-3)

என்பதனுள் இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் யானையொடு படுத்துக் கூறுவது காண்க.

'நுதலணந் தெழுதரும் தொழினவில் யானைப்
பார்வற் பாசறை தருஉம் பலவேல்
பூழியர் கோவே பொலந் தேர்ப் பொறைய'

(பதிற்.9-4)

'பெருநல் யானை யிறை கிழவோயே'

(பதிற்.9-10)

என்பவற்றாலும் சேரரது யானையின் மிகுதி விளங்கும்.

'வேழ முடைத்து மலைநாடு' என ஔவையார் சேர நாட்டின் யானை மிகுதியைக் குறிப்பித்ததும் கருதற்பாலது.

**சமயம்:**

சேரர்கள் எல்லாமதங்களும் நாட்டில் நிலவும்படி அவற்றுக்கு எல்லாம் இடமளித்தவராவர். பண்டைக்காலத்துச் சேரர்கள் சைவர்களாகவே இருந்தார்கள் என்பதே நூல்களால் அறியப்படுவது. திருமாலையும் வணங்கும் பான்மை உடைய பொதுப்பான்மை அவர்களிடத்தில் விளங்கிற்று என்பதற்குச் சான்றுகள் உள்ளன. குலசேகரர் கால முதற் கொண்டே சேரமரபில் வைணவபத்தி அரும்பி வளர்ந்தது என்று கொள்ள இடமுண்டு.

புறப்பொருள் வெண்பாமாலையில் பாடாண்படலத்துக் கடவுள் வாழ்த்தில், 'காவல் கண்ணிய கழலோன் கைதொழு மூவரிலொருவனை யெடுத்துரைத்தன்று' எனப் பொதுப்படக் கூறியதனால் முத்தமிழ் வேந்தரும் திருமூர்த்திகளையும் பொதுவாக வணங்குந் தன்மையர் என்பது அறியலாகின்றது. அதன் உதாரணச் செய்யுள்

வையமகளை யடிப்படுத்தாய் வையகத்தார்
உய்யஉலகம் வெளிப்படுத் தாய் வெய்ய
அருந்திரலாழி அரவணையா யென்றும்
நெடுந்தகை நின்னையே யாம்'.

எனத்திருமால் வாழ்த்தாக இருத்தலால் ஐயனாரிதனார் காலத்துக்கு முன்பே சேரமரபினருள் திருமால் வழிபாடு காலூன்றியது எனக் கொள்ளலாகும்.

மேலும், பதிற்றுப்பத்து என்னும் நூல் நான்காம்பத்து, முதற் செய்யுளில்,

'வண்டூது பொலிதார் திருஞெம ரகலத்துக்
கணைபொரு திகிரிக் கமழ்குரற் றுழா அய்
அலங்கற் செல்வன் சேவடி பரவி
நெஞ்சுமலிவுவகையர் துஞ்சுபதிப் பெயர'

என்னும் பகுதியில் சேரர்களது திருமால் வணக்கம் குறிக்கப்பட்டி- ருக்கிறது. 'செல்வன் என்றது திருவனந்தபுரத்துத் திருமாலை என அதன் உரையினும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.எனவே, பதிற்றுப்பத்துக் காலமாகிய கடைச்சங்க காலத்திற்கு முன்பே (1800ஆண்டுகளுக்கு முன்பே) சேரர் திருமால் வணக்கத்தை மேற்கொண்டவர் என்பது பெறப்படும். செல்வக் கடுங்கோவாழியாதர் திருமாலுக்கு ஒகந்தூர் என்ற ஒர் ஊரளித்தமை பதிற்றுப்பத்தால் தெரிகின்றது

மாய வண்ணனை மனனுறப் பெற்றவற்
கோந்திர நெல்லி ஞெகந்தூரீத்து —(பதிற்7-பதி

என்பது காண்க.

செங்குட்டுவன் வடநாட்டிற் செல்ல முற்பட்டகாலைச் சிலர் திருக்கோயில் பிரசாதங் கொண்டு கொடுத்தனர் எனச் சிலப்பதி- காரம் கூறுகின்றது.

# கலித்தொகைப் பதிப்புரை★

சி.வை. தாமோதரம்பிள்ளை

கயிலை மன்னிய கடவுட னனுக்கிர கத்தி
னியல்பு காட்டிமற் றேழையேம் பொருட்டுரு வேய்ந்த
செயல் கை லாயநா தக்குரு திரு மறைக் காட்டிற்
பயில வாய்ந்த தென் ருய்ந்தவ னிணையடி பணிவாம்.

திங்க ளாம் பலுஞ் செங் கதிர்ச் செல்வன் — கொங் கவிழ் நறை யிதழ்ப் பங்கய மலரு — நீர்மிசை யலர்த்துஞ் சீர் வறி தாக— வள மலி யுலகி லுள நிறை புலமைக் கலைக் கதிர் கொடு கருஞ் சிலைக் கிணை கடந்த — என் இதயமுஞ் சிறிதளவு உதயமாம்படி பார்மிசைப் பக்குவிட நெகிழ்த்திய மிக்க சிறப்பினையுடைய

சுன்னை முத்துக் குமாரன் றுணைக் கழல்
சென்னி நாவொடு சிந்தை திருந்த வைத்
தன்ன மூதறி வாளர் பதிந்துதித்
திந் நிலத் திவ் வுரையின் றியம்பு கேன்.

தமிழ் சுய பாஷை யென்பதூஉம், அதன் பெயர் திராவிட மரூஉ வன்று தமிழ் மொழியே யென்பதூஉம், அஃது பரத கண்டத்தில் எப் பாஷைக்கும் பிந்தியதன் றென்பதூஉம், எவ் வாற்றானும் பிற பாஷைகளுக்குத் தாழ்ந்த தொன்றன் றென்பதூஉம், வீர சோழியப் பதிப்புரையில் ஆக்ஷேப நிராகரண சகிதமாக விவரித் தெழுதியிருக்கிறேன்.

ஆயினும் என் கூற்றை நன்குணராது, திராவிடமென்னும் சமஸ்கிருத பதந் தமிழெனத் திரிதற்கு மார்க்கமில்லையென்று யான் மறுத்தது போலச் சிலர் மயங்கி வெகு கஷ்டப்பட்டு விதி நாட்டித் திர வென்பது தவ் வாகியும் வ கர ட கரங்கள் ழகரங்களாகியும் மருவி அம் மீறு கெட்டுத் தமிழாயிற் றென்று பல்லுதா கரணங்கள் காட்டி வாதித்து, இனி யான் தம் மதத்திற் உடம்படுதலே தக்கதென்றும் போதித்தனர்.

---

★பழம்பெரும் தமிழ் நூல்களைத் பதிப்பித்த தமிழறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளையின் இம் முன்னுரை அன்பர் சிலரின் வேண்டுகோளுக்கிணங்க ஈண்டு வெளியிடப்படுகிறது.

இப்படி மருவுதற்கு விதியில தென்று யான் யாண்டுஞ் சாதித்திலேன். இதுவும் ஒரு பெரு மயக்கே. தமிழென்பதற்கும் திரவிடமென்பதற்கும் உள்ள சப்த பேதத்தைக் குறித்து விசாரிப்புழியன்றே இது பயன்படுவது? அன்றியும் மரூஉ மொழியிலக்கணமு-மொன்று உளதாக விதி விதியென்று மாரடிக்க வேண்டிய தலைவிதி தானென்னே? மரூஉ வாற்கு ஒரு வழிப்பட்ட விதியுண்டோ? திரவிடந் தமிழென மரீஇயற்றென்ருப் போதாதா? தமிழென்னுஞ் சொல் தமிழ் பாஷை சுயமொழியா திரவிடமென்னும் வட மொழித் திரிபா எஃதுண்மையென ஆராய்ச்சி செய்வான் புகுந்தபோதே திரவிட மென்பது தமிழென மாறுதற்கு விதியுண்டென்று யான் ஒத்துக் கொண்டதுதானே போதருமல்லவா?

இனி இவர் கூற்றின் சாராமிசத்தைச் சிறிது கவனிப்போம். மதுரையில் ஒரு திருமலை நாயக்கன் இருந்தனன். சென்னையில் ஒரு திருமலை நாயக்கன் இருந்தனன். இருவரும் வயோதிகர். சென்னைக்கும் மதுரைக்கும் மிகச் சுளுவிலும் விரைவிலும் போய்வரத் தக்கதாகப் புகைரத வீதியுண்டு ஆதலால் இரண்டிடத்தும் இருந்தது ஒரேதிருமலை நாயக்கன் தானென்பதே

இஃதென்ன தர்க்க லக்ஷணம்! என்ன விபரிதம்!! ஒரே காலத்தில் இருந்தாரென்று கொள்ளினும் இது சித்தாந்தமாகாதே.

மூதாதைத் திற மன்றலிற் பௌத்திரன் சந்தான தாம்பூலம் பரிமாறினனென்பதற்கும் இதற்கும் யாது பேதம்? தமிழென்னும் பதத்தை எடுத்தாண்ட அகத்திய தொல்காப்பியர் காலத்துச் சமஸ்-கிருத நூலுடையோராய் நாரத வியாச வசிஷ்டராதியர் வாய் மொழி-யினின்றும் திரவிட சப்தம் வழங்கியதை முதற் காட்டியன்றே பின்னர் இம்மதம் நாட்டப் புகுதல் வேண்டும்?

சிவபெருமான் அகத்தியரைப் பொதியிற்கு அனுப்பிய கதை ஸ்காந்தம் முதலிய பழைய புராணங்களில் உளதாகவும், ஆண்டுத் திரவிட சப்தத்தைக் காண்கிலமே. ஆலசிய புராணம், பாகவதம் முதலிய பிற்றை நாள் நூல்களி லன்றே அது முளைத்தது. யான் போகும் இடங் கலை வல்லோரும் முனிவரும் நிறைந்த பெருமாண்-பிதாதலில் அவர்கள் மொழியை உபதேசித்து என்னை ஆண்டனுப்புக என்றதன்றித் திரவிடமென்று கேட்டதில்லையே.

வியாசர் புராணங்கள் செய்த காலத்திற் தமிழ் இல்லை. இருப்பினன்றே அதன் பெயர் வரும்! இஃதொன்றே தமிழ் பிற்றை நாளது என்பதற்குச் சான்ருகு மென்றும் வாதிப்பார் போலும் புராண இதிகாசங்களினதாகச் சேய்ங்கலூர் புனலியூர் முதலிய சுத்த தமிழ்ப் பெயர்கள் கூறப்பட்டுக் கிடப்பதே தமிழ் அவர் காலத்து உண்மைக்குச் சான்ருகும்.

ஒன்றினின்று ஒன்று பிறந்தது உண்மையாயின், அதற்கு வேறு ஏது காட்டி முடிவு செய்யாமல் எழுத்திலக்கண விபினுல் ஒன்றனை ஒன்று யான் என்று கூறி, அது மாத்திரத்தாற் தமது மதந் தாபிக்கப் பட்ட தென்று முழங்குவது ஆன்ருர் அறிவிற்குப் பெருமையன்று.

மேலும் ஸ்தயனப் பொறுப்பும் அவரதே எழுத்திலக்கண விதி யொன்று மாத்திரமே கொண்டு நியாயம் பேசில் உவால் என்னும் (wall) ஆங்கிலேய பதம் பந்தல் பந்தர் சாம்பல் சாம்ப ரென்ருற்போல லகரம் ரகாரமாகிப் பிரவாளம் பவளம் பிரயாணம் பயணமென்ருற் போல ஐகாரங் குறுகிச் சீலம் சுசிலம் சுகம், அசுகம் என்ருற் போலச் சப்பிரத்தியம் பெற்றுச் சுவரென்னும் தமிழ்ச் சொற் சனித்த தென்றும் சிவிறி விசிறி யென்ருற் போல ஹோர்ஸ் (Horse) குதிரையென்றும் Rice ரைஸ் சோறென்று ஆயிற்றென்றுஞ் சொல்லலாமே.

Sunday ஸன்டே முதலிய வாரப் பெயர்களெல்லாம் ஸன் (Sun) னினின்று சூரியனும், (Moon) முனிலிருந்து சோமனுந் தியூஸ் ஸ்யூத் தென மாறிச் செவ்வாயும் பிறந்தனென்று சாதிக்கலாமே. இதுவா அந்தோ! இவர்கள் கற்ற எழுத்திலக்கண முடிவு?

இனிக் கால நிர்ணயத்தையாவது, கொஞ்சமேனும் கவனிக்கின்ருர்களா? சோம சுந்தர பாண்டியனென்ற பெயரை ஒருவற்கதிகம் வகித்தல் தகாதென்ருற் போலக் கிரேக்கர் இந்தியாவிலே ஒரு சோம சுந்தர பாண்டியனெடு 1500 வருஷத்திற்கு முன் கொண்டாட்ட முடையராயிருந்தனராதலால் அவனே ஆதி சோம சுந்தர பாண்டியனென மயங்கி மதுரைத் திருவிளையாடற் சரிதை யெல்லாம் முந்தை நாளைச் சரிதையென்று துணியுங் காலுவலாசிரியர் கூற்று எத் தன்மையது? இன்னேரன்னர்க்குத் தமிழ்க்கு 1600 வயதும், திரவிடத்துக்கு 2000 வயதும் என்றும் யாங் காட்டுவதனுல் யாது பயன்?

மேலும் ஆனனம் பங்கசங் கிரிடமென்றின்னே தமிழென்பதும் திராவிடமென்பதும் ஒரு பொருளனவும் அதுவுமன்று. அங்கம் வங்கம் குலிங்கம் வங்காளம் என்ருற் போலத் திராவிடம் முதலில் நாட்டைக் குறித்துப் பின்னர் ஆகு பெயராய் அந்நாட்டு மொழியைக் குறிப்பது.

அங்கர் வங்கர் போலத் திர்ாவிடம் என்பது திராவிட தேசத்தார் என்னும் பொருளதன்றித் திராவிட பாஷை பேசுவோரென்னும் பொருளுடையதன்று தமிழ் அங்ஙனமன்று. தமிழென்ருற் தமிழ்நாட்டா ரென்னும் பொருள் தொனிபாது தமிழ் மொழி பேசுவோரென்னும் பொருளே தொனிப்பது.

சமஸ்கிருதத்தினின்று தமிழில் வந்த சொற்களுக்கு இவ்வாருக பொருட் பேதமின்று. சமஸ்கிருதத்திற் குறிக்கும் பொருள் எதுவோ அதுவே தமிழகத்தும் குறிக்கப்படும். இதனுனும் தமிழும் திராவிட-மும் வேறுவேறென்பது போதரும்.

இன்னும் இரண்டொரு நியாயந் தமிழ் வழக்கை ஒட்டி ஈண்டுக் கூறுவன். தமிழ் திராவிடத்தின் திரிபாகிய வடமொழியா-மாயிற் பஞ்ச திரவிடமென்பார் பஞ்ச குற்றம் பஞ்சகேள்வி, பஞ்ச தொழில் பஞ்சதாயார் பஞ்சதிணை பஞ்சபாலென்று இன்னேரன்ன தொகைகளை ஒழித்து விட்டாற் போலப் பஞ்ச தமிழென்பதனையும் விலக்கி விட்டதென்னே? ஐவகை பொருள் தொக்க வடமொழிப் பெயர்களெல்லாம் பஞ்ச என்னும் எண்ணுப் பெயர் புணர்தற்-பாலான்ருே?

முத்தீயைத் திரி தீயென்ஞர் முப்பழத்தைத் திரிபழமென்ருர். அஃதொப்ப முத்தமிழைத் திரிதமிழென்ஞர். மேலுந் திரிபுரத்தைத் திரிபட்டணமென்ஞர். பஞ்ச பாதகத்தைப் பஞ்ச மறமென்ஞர் அவ்வாறே பஞ்ச திராவிடத்தையும் பஞ்ச தமிழென்ஞர். வேறென்ன சாட்சி வேண்டும் சிறுநூல் அருகி வழங்குஞ் சதுர்மறை சத்தகட-வென்னும் கற்ப வழக்கு விலக்கென்ருெழிக அதுவும் அப்படிப்பட்ட ஆன்ருேர் வழக்கன்று.

கொடுந் தமிழின் பாற்பட்ட இழிவு வழக்கேயாம். பஞ்சதமிழ் திரிதமிழென்று அங்ஙனே இழிந்தும் வழங்கிற்றதலதென்பது யான் கூறவேண்டியதில்லை. உரிய நெய் தாள தாமரை எனல் போலத் தமிழ்ப்பிள்ளை, தமிழ்ப் பல்லவன் தமிழவண்ணல் தமிழ நாகன்

எனத் தமிழென்னுஞ் சொல் அகரச் சாரியை பெற்று வருதலும் அஃது ஆரிய மொழியல்லாத சுத்த தமிழ்ச் சொல்லாதல் பற்றியே யென்றறிக. தமிழில் மகரஈறு பெற்று அது பற்றி அத்துச் சாரியை சேரப் பெற்ற சில மொழி தவிர யாதொரு சொல் தமிழ்ச் சாரியை பெற்றது அது தமிழ்ச்சொல் என்றே துணிக.

இனி ஆரியத்தில் வழங்கிய திராவிடமென்னும் பெயர் யாது பொருளைக் குறித்தது? அப்பொருள் உள்ள இடத்தில் யாது பெயர் அதற்கு நிகழ்ந்தது? பல்லாயிர வருஷமாகத் தமிழ் தனக்கொரு பெயரில்லாமலா இருந்தது? என்று யான் கேட்டதற்கு முகமென்னும் பெயர் வடமொழியினின்று வருவதற்கு முன்னே தமிழில் முகத்திற்கு யாது பெயர் வழங்கிற்றென்றுங் கேட்பாருளர் யாதாயினும் ஒரு மொழியில் இரண்டோரெழுத்துச் சமஸ்கிருதத்திருந் தமிழிற்கும் பொதுவாயின், அது சமஸ்கிருதத்திலிருந்து வந்ததென்று சாதித்தல் சரியன்றென்றும், இங்கிலீஷிலுள்ள பாதர், மதர் ஒப்பத் தமிழிற் பிதா மாதா என்றிருத்தலால் ஒன்றினின்று ஒன்று வந்ததல்ல-வென்றும் யான் வற்புறுத்தியதைச் சிந்தை செய்தனராயின் முக-மென்பதும் அங்ஙனே இரு மொழிக்கும் பொதுவென்று கொள்ளாது இவ்வாறு கேட்பது போலி நியாயமல்லவா? சமஸ்கிருத மொழி ஒன்ருவது பயிலாத கலித்தொகை முதலிய சங்கத்தார் நூல்களில் முகமென்பது எத்தனையோ இடத்தில் வருகின்றதே. அன்றியும் முகமென்னும் பலபொருளொரு சொல் தமிழ்த் திரிசொல்லென்பது அதற்குச் சமஸ்கிருதத்தில் வழங்காத பொருள்களும் வழங்குவதினுற் போதரும்.

இது போலத் திரு அகம் புதன் தாமரை மனமென்ருற்-ரெடக்கற்று அளவிறந்த சொற்கள் இரு மொழிக்கும் பொது வாயுள்ளனவற்றை ஒன்றற்கே உரியதொன்று கோடல் நடுவு நிலைமையன்று. ஒருமொழி பல பாஷைக்குப் பொதுவாய் நிகழ்வது பாஷா சம்பந்தம் உணர்ந்தோருக்கு நூதனமன்று, திருமண் திரு நீறு திருவிழா அங்கை அஞ்செவி புதன்கிழமை செந்தாமரை முதலிய செந்தமிழ் வழக்கும் புணர்ச்சியும் சமஸ்கிருத மணமுமில்லாத பண்டைய சுத்த தமிழ் நூல்களில் ஆங்காங்கும் பல இடங்களிலும் காணலாம்.

இவற்றொடு பெரும்பாலும் ஊடாடாது பிற்றைக் காலத் தனவாகிய இதிகாச புராணதிகளிலும் சமய சாஸ்திரங்களிலும் மிக்க பயிற்சியுடையாரே தமிழின் தொன்மையைநன்குணராமல் அதனை

வடமொழியினின்று உற்பத்தியாயிற் றென்பார். இலக்கணக் கடலாகிய ஈசான தேசிகரே இவ்வாறு மயங்கினரெனின் மற்றையோர் பிழைப்பது அதிசயமோ? இவர் அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்று ளொன்றேயாயினுந் தனித் தமிழுண்டோ என்று கூறியதே அவர் இந்நூல்களிற் பயிலாமைக்கும் சான்ருகும்

தமிழ் செய்த தவக் குறைவே அன்னோர் வடமொழிச் சாகரத்தில் மூழ்கி ஆனந்தித்துத் தமிழை அலட்சியம் செய்தது. வட நூற் பயிற்சியில்லாத என் போலியர் இவ்வித ஆராய்ச்சியில் ஒரு முடிவு காண அருகரன்றென்று சிலர் வாதித்தனர். காண்டல் கருதல் உரையென்னும் மூன்று பிரமாணங்களே அறிவிற்கு கரு- வியாம். அவற்றுள் முன்னையது இவ்வாராய்ச்சிக்கு ஒவ்வாது.

பின்னையவற்றுள்ளுங் கருதல் காண்டலானும் உரையாலும் மூன்று பிரமாணங்களே அறிவிற்கு கருவியாம். அவற்றுள் முன்னையது இவ்வாராய்ச்சிக்கு ஒவ்வாது. பின்னையவற்றுள்ளுங் கருதல் காண்டலானும் உரையாலும் பெற்ற சாதனங்கள் மேற்சென்று நிகழ்வது. ஆதலால் உரையே ஈண்டு இன்றியமையாதாம். இனி இவ்வுரைப் பிரமாணங் கல்வி கேள்விகளால் அடைவது.

இவற்றுள் கேள்வியில்லாக் கல்வி சிறப்புருது. கல்வியின்றியும் கேள்வி சிறப்புறும். ''முற்றப் பகலு முனியா தினி தோதிக் கற்றலிற் கேட்டலேநன்று'' திருவள்ளுவநாயனருஞ் செல்வத்து ளெலாந்தலை'' என்றது அதனையே. பின்னைச் சமஸ்கிருதநூற்களில் பொருள் வல்ல புலவர் வாயிலாக் கேட்டறிந்த அறிவன் மேல் யுத்தி பூர்வமாகக் கருதல் நடந்துழி வருங் குறைவு யாதோ? அன்றியும் கல்வியிலாரும் அறிவிற் கேள்வியான் வருவது நூறு மடங்காகும்,

ஆதலாற் பலகாலும் விபரீத உணர்ச்சியையும் தருவதாகிய கல்வியே இதற்கு உபகாரப் படுவதன்றென மறுக்க.

> ''எப் பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
> மெய்ப் பொருள் காண்பதறிவு''

வடமொழியின் மகத்துவத்தை யான் எஞ்ஞான்றும் எட்டுணையும் அவமதித்திலேன், தமிழ் அனுதியென்ருவது சமஸ்கிருதத்திற்கு முந்தியதென்ருவது கொள்கிலேன்.

ஆரியர் வருவதற்கு முன் பரத கண்டத்திலிருந்த பாஷை தமிழென்றும் ஆரியரால் முறியடிக்கப்பட்ட தமிழர் தென்திசை சென்று சேர சோழ பாண்டியராச்சியங்களை ஏற்படுத்தினர்களென்றும் ஆதலால் பரத கண்டத்திற்குத் தமிழ் முந்திய தென்றுஞ் சாதிப்பாருளராகவும் யான்.

"இரு மொழிக்குங் கண்ணுதலார் முதற்குர வரிசை வாய்ப்ப
இரு மொழியும் வழிப் படுத்தார் முனி வேந்தரிசை பரப்பும்
இரு மொழியு மான்றவரே தழிஇயி னரென்றலில்
இரு மொழியு நிகரென்று மிதற்கைய முளதேயோ"

என்ற முனிவரர் பதத்தைச் சிரமேற் தாங்கி இரு மொழியும் சமத்துவ முடையன வென்றும் ஆகவே தமிழிற்கும் சமஸ்கிருதந் தாய் மொழி யன்றென்றுந் தமிழின் பெயர் திரவிடமென்பதன் மரூஉவன் றென்றுஞ் சாதிப்பான் நின்றனன்.

ஆயினும் சுதேசமித்திரன் வாயிலாகத் தோன்றி ஒருவர் யான் கூருத கூற்றுக்களையும் என் தலைமேலேற்றிச் சமஸ்கிருதத்திலும் வைஷ்ணவத்திலும் அசூயை கொண்டிருக்கின்றேனென்று பழி சுமத்தினர். சைவரும் சமணரும் போல வைஷ்ணவர் தமிழைப் பரி-பாலித்திலரென்று யான் சாற்றியதில் வைஷ்ணவ நிந்தை எவ்வாறு பெறப்பட்டதோ? "வைணவர்கள் திராவிடத்தைப் பள்ளித் தமிழென்று ஏளனமாயுரைப்பர். "வைணவக் கிரந்தர் தமிழிற் செய்தால் அது தமிழுக்கும் கவுரவம்" என்று கழறிய அவர் கூற்றை என் சொல் மெய்ப்பிக்கவில்லையா.

பின்னை என் மேல் ஏன் அவர்க்கு இவ்வளவு நிந்தனை? விதவையை மொட்டையடிக்கும் உறவினர் அவள் அளகத்தின் மேற் கொண்ட வெறுப்பினலா அவ்வாறு செய்விக்கின்றனர்.

யானை தன் தலை மேல் மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போல் இன்னும் பல சைவ நிபந்தனைகளுக்கும் சைவாசிரிய நிந்தனை களுக்கும் இவர் தன்னை ஆட் படுத்திக் கொண்டதனல் எனக்கு யாதும் மனக்கோட்டமிலது ஆயினும் அவர் கடிதத்தில் என் கூற்றிக்கு ஆக்ஷேபமாகச் சில வாதந் தெரிவிக்கப் பட்டமையால் அவற்றை மாத்திரம் ஈண்டு நிராகரிக்கின்றேன்.

"ஆரிய சம்பந்தமின்றித் தமிழ்க் கிரந்தங்கள் கிடையா என்ருர். இது பிறவிக் குருடன் சூரிய சந்திரருண்மையை மறுத்த தொக்கும். இதனை முன்னரே நிராகரித்திருக்கின்றேன். இந்த பொய்மையை மதுரைச் சங்கத்து நூல்களுள் ஒன்றையாவது பார்த்து உணர்வாராக. இக் கலித் தொகையே இதற்கும் சான்று பகரும்.

"அகத்தியத்திற் கிர்வாணத் தோரணைகள் அனேகம் காணலாம் நாடகத்தை நாடகமெனவே அகத்தியர் கூறுவர் என்ருர். அகத்தியத்தை இப் பெருமான் யாண்டுங் கண்டனரா? இரண்டொரு தோரணைகளைக் காட்டி உதாகரித்தாலன்ருே இஃது ஆரியச் சிறப்புத் தோரணையென்று தெரியலாம்?

பாஷைகளின் வியாகரணங்களிலெல்லாம் சமஸ்கிருதத்தோரணை காணலாமே. எழுவாய் பயனிலை கொண்டு முடியுமென்ருல் இது எந்தப் பாஷைத் தோரணை? வியாகரணமென்ற போதே எல்லாப் பாஷை வியாகரணங்கட்கும் பொது இலக்கண முண்டாயிருத்தல் அவசியமாமே.

இயலிசை நாடகத் தமிழெனத் தமிழிற் கூறிய நாடகமும் புராண இதிகாச திரவிய நாடகமென வடமொழியார் கூறும் நாடகமும் வேறு வேறென்று அவர் அறிந்திலர் போலும். ஒன்று மொழியியை விலாசங்களைக் குறிப்பது, மற்றது கிரந்த நடை சுவைகளைக் குறிப்பது இவை தம்முள் வேற்றுமையாம்.

"தமிழெழுத்துக்களே கிரந்தாக்ஷரங்களின் திரிபு" என்ருர். இதனற் போந்த தென்? கிரந்தாக்ஷரம் முந்திய தொன்ருகும். தருமன் துரியோதனனுக்கு மூத்தவனென்ருற் பாண்டு திரித ராட்டின் தமையனுவானு?

'மூல வாக்கிய வேதம் கீர்வாணமே' என்றதனற் சித்தாந்தமானதுயாது? வடமொழி முந்தியதாகுக. காலத்தால் முந்தியதெல்லாம் பிந்தியதற்குக் காரணமாமா? அதிதி முந்தியவளாதலால் தைத்தியருக்குத் தாயாயினளா! ஒன்றை சித்தாந்தஞ் செய்யும்போது அதன் பூர்வோத்தர பக்ஷங்களை திருட்டாந்தங்களை நிச்சயித்தன்ருே துணிதல் வேண்டும்?

''காசியிற் சங்கத்தை அடக்கத் தவம் புரிந்து வீரம் பெற்றுத் தமிழையடைந்தது உலகம் அகத்தியன் மூலம்'' என யான் எஞ்ஞான்றும் கூறிற்றிலேன்.

''கிர்வாண நாயகனை மணந்தவள் வேட்கை வேளையில் மாத்திரம் அவனை இச்சித்துத் தன் மன வழியே நடந்ததினன்றோ அந்தப்பட்டி சோபியாமல் இழிவடைந்தாள்'' என்று திட்டியுங் ''காள மேகமே நீ எமது நாளை மேகம் போல் பொய்த்தனையே! சிறப்புத் தானுனக்கு'' என்று புலம்பியும் இன்னோரன்ன இழி மொழிகள் செறிந்தும் வருங் கூற்றுக்கு யான் விடை எழுது வேனல்லேன்.

உலகத்தில் இவர் போலியராற் திட்டப்படுவதற்குத் தகுந்த யோக்கியதையாவது உள்ளவனாக யான் மதிக்கப்பட்டதே எனக்குப் பெருஞ் சிறப்பென்று கொண்டனன்.

தமிழுக்குக் காலாந்தரத்தில் இரண்டு பெரும் பூதங்களால் இரண்டு பேரிடையூறுகள் நிகழ்ந்தன. குமரியாறும் அதன் தெற்-கணுள்ள நாடுகளுஞ் சமுத்திரத்தின் வாய்ப்பட்டமிழ்ந்த போது தமிழ்ச் சங்கத்திற்கு ஆலயமாய்ச் சர்வ தமிழ்க் கிரந்த மண்டபமாயிருந்த கபாடபுரம் அதனகண் இருந்த எண்ணாயிரத்தொரு நூற்று நாற்பத் தொன்பது கிரந்தங்களோடு வருண பகவானுக்கு ஆசனமாயிற்று.

பாண்டிய நாட்டின் வடபாலில் ஆங்காங்குச் சிதறுண்டுகுலாவிய சாதரண சன விநோதார்த்தமான சில கிரந்தங்களும் பள்ளிக் கூடங்களிற் சிறுவர்தங் கல்வித் தேர்ச்சிக்குரியவராய் வழங்கிய சிறு நூல்களும் சில்லறை வாகட சோதிடாதிகளுமே பிற்காலத்தார் கைக்கு எட்டுவன வாயன.

''ஏரண முருவம் யோக மிசை கணக் கிரதஞ் சாலந்
தாரண மறமே சந்தந் தம்ப நீர் நில முலோகம்
மாரணம் பொரு ளென்றின்ன மான நூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ வழிப் பெயருமாள''

எனப் புலம்பிய நமது முன்னோரிடத்திலிருந்து நாம் அடைந்த பிதி ரார்ச் சிதம் வெறும் பெரியனுஞ் சிலவேயாம்.

# செய்திக் கதிர்

## டில்லியில் பாராட்டு

இந்தியக் குடியரசுத்தலைவரின் மாளிகையில் தர்பார் மண்டபத்தில் மார்ச்சுத்திங்கள் 22-ஆம் நாள் பரிசளிப்பு விழா ஒன்று நடைபெற்றது. பாராட்டுப் பெறும் ஒவ்வொருவரும் மேடைக்குச் செல்லும்போது வழக்கமான கைதட்டலும், மகிழ்ச்சியும் அங்கு நிலவியது. பாராட்டும் பாரத ரத்ன என்ற பட்டமும் பெற்றவர்களில் அன்னை தெரசாவும் ஒருவர். இவர்கள் எல்லோரையும் விட நீண்ட நேரக் கைதட்டலுக்கும் ஆரவாரத்திற்கும் மகிழ்ச்சிக்கும் காரணமாக இருந்தவர் திருமதி. ஜாடிங்கி என்ற நாட்டுப்புறப் பெண்ணாகும். மீஜோரம் பகுதியில் ஒரு கிராமத்தைச்சார்ந்த இவர் வீரசக்ர விருது பெற்றிருக்கிறார். இந்தப் பாராட்டைப் பெறுவதற்கு ஆதாரமாக இருந்த நிகழ்ச்சி நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. தனது ஊருக்கு அருகில் இருந்த காட்டுப்பகுதியில் இந்தப் பெண் தனியாக விறகு வெட்டிக் கொண்டிந்தாள். பெரிய புதர் ஒன்றிலிருந்து திடீரென்று உறுமிக்கொண்டு ஒரு புலி இவளை நோக்கிப் பாய்ந்து வந்தது. கொஞ்சமும் அஞ்சாத இம் மலை நாட்டுப்பெண் தனது கைக் கோடரியாலேயே புலியினைத் தாக்கிக் கொன்றிருக்கிறாள். இவளது வீரமும், திறமையும், மனத்திண்மையும் டில்லி மாநகரில் அன்று பாராட்டப்பட்டுள்ளது.

சீறிவந்த புலியதனை முறத்தினாலே-சிங்கார
மறத்தி ஒருத்தி துரத்தினாளே"

என்று பாடுவது வெறும் கற்பனையல்ல; பண்டைத்தமிழகத்தே இத்தகு செயல்கள் உண்மையாகவும் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணுவதற்கு மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சி சான்றாக அமைந்துள்ளது.

## பொன்மலையில் இசையமுதம்

கான மழை பொழிகின்ற இசைவல்லுநர்கள் கருத்து மழையும் பொழிகின்றபோது செவிக்கு மட்டுமன்றி சிந்தைக்கும் விருந்து கிடைக்கிறது. பொன்மலையில் பாரதி நுண்கலைக்கழகத்தின் சார்பில் கர்நாடக இசைவல்லுநர் டாக்டர் இராமநாதன் தமது இசை

நிகழ்ச்சிக்கு முன்னால் தமிழிசைபற்றிக்கூறிய கருத்துகள் பாராட்டத்தக்கன "இற்றை நாட்களில் நாம் பயின்று வரும் பற்பல ராகங்களும் சங்கீதமும் மூர்த்திகளுக்கு முன்னாலேயே அப்பர், சுந்தரர் போன்ற சமய குரவர்களால் வளர்க்கப்பட்டனவாகும். தேவார காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட தமிழிசையின் பாரம்பரியம் வைணவ ஆழ்வார்கள், அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதி கோடீஸ்வர அய்யர், பாபநாசம் சிவன் போன்ற இசை மேதைகளால் தொடர்ந்து போற்றி வளர்க்கப்பட்டுள்ளது."

ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி"

என்பது சுந்தரர் தேவாரம். தாளத்தோடு இசையமைத்துப் பாடக்கூடிய பல்வேறு பதிகங்கள் சம்பந்தர் தேவாரத்தில் பரந்து கிடக்கின்றன. ஈசன் எந்தை இணையடி நீழலை மாசில் வீணையாகக் கண்டவர் அப்பர். இளங்கோவின் சிலம்புச் செல்வத்திற்கும் 'இசை-நாடகப் பொருட்டொடர் நிலைச்செய்யுள்' என்பது ஒரு பெயரல்லவா! சங்க இலக்கியத்திலும் காணக் கூடிய இசை பற்றிய குறிப்புகள் பற்றி நமக்குத் தெளிவாகத் தெரியவில்லையாயினும், இசைக்கலையின் மேன்மையினை நமது முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர்.

ஒலியல் வார் மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாட
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடு பெற் றொய்யென

மறம் புகல் மழகளிறு உறங்கும் நாடன்' என்னும் சங்க இலக்கியப்பகுதி இசைக்கலையினை நமது முன்னோர் கையாண்ட திறத்தினை விளக்குகிறது.

உயர்நீதிமன்றத்தில் தமிழ்:

ஈழத்து நாட்டு உயர்நீதி மன்றம் ஒரு வழக்கில் அண்மையில் அளித்த தீர்ப்பு நமது சிந்தனையை ஈர்க்கிறது. திருமதி குமாரசாமி என்பார் குடிவார, வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் தொடர்ந்த வழக்கில் அவர் தமது வாக்குமூலங்களைச் சிங்கள மொழியில் தான் அளிக்க வேண்டும் என்று கொழும்பு மாவட்ட நீதிபதி ஆணையிட்டிருந்தார். இதனை எதிர்த்துப் போடப்பட்ட வழக்கில்

மூன்று நீதிபதிகள் அடங்கிய உயர்நீதிமன்றம், திருமதி. குமாரசாமி தமது வாதங்களைத் தமிழிலே கூறலாம் என்பதோடன்றி தமிழினைத் தாய் மொழியாகக் கொண்டோர் இலங்கையின் எந்த வழக்கு மன்றத்திலும் தமிழிலேயே பேசலாம் என்றும் தீர்ப்பு அளித்துள்ளனர்

ஈழநாடு முழுதும் சிங்களமே ஆட்சி மொழியாக உள்ளது. இருப்பினும் சட்டரீதியாக ஈழத்தின் வடக்கு, கிழக்கு மாநிலங்களில் தமிழுக்கும் இணையான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு மாநிலங்களில் உள்ள நீதி மன்றங்களில் தமிழில் பேசலாம் என்பது இப்போதைய நிலை. உயர்நீதி மன்றத் தீர்ப்பின் விளைவாக, ஈழ நாட்டின் அனைத்து நீதிமன்றங்களிலும் தமிழ் முழங்கும் என்பது அறிந்து மகிழ்கிறோம். நீதியும் நேர்மையும் நிலைத்திட வேண்டும் என்று வழக்கு மன்றம் செல்லுகின்ற வாதியிடம் மொழிச்சிக்கல் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்று முடிவு செய்த ஈழத்து உயர்நீதி மன்றம் நமது பாராட்டுதலுக்கு உரியது.

## வேடிக்கையான நாவலும் விபரீத விளைவும்

இலக்கியம் வாழ்க்கையினைப் பிரதிபலிக்கிறது என்பது பழைய கதையாகி விட்டது. இன்றைய நாட்களில் புதிய உத்திகளும், கோணங்களும் இலக்கியங்களில் புகுத்தப்பட வேண்டும் என்ற ஆர்வம் கரைபுரண்டு ஓடுகிறது. இலக்கிய கற்பனையும் கொடிக் கட்டிப் பறக்கிறது. இதன் விளைவாக எதிர்கால மானுட வாழ்விற்கு நலம் பயப்பதை விடுத்து இலக்கியம் வாழ்க்கையில் பற்பல கோணல் மாணல்களை ஏற்படுத்தி விடுமோ என்று நிதானமான போக்கும், நேரிய சிந்தனையும் கொண்டோர் அஞ்ச வேண்டியுள்ளது.

அண்மையில் அமெரிக்காவில் வெளியான ஒரு நாவல் (Spawn) ஏராளமாக விற்பனையாகிறது. காரணம் இதுதான் இரண்டாம் உலகப்போரின் முடிவில் ஹிட்லர் மறைந்தார். வீரியமும் ஆண் தன்மையும் உள்ள அவருடைய விந்து உறைந்துபோய் ஓரிடத்தில் காணப்படுகிறது. அது மீண்டும் திரவமாக்கப்பட்டு அதனைப்பற்றி ஒன்றும் அறியாத ஒரு பெண்ணின் உடலில் அது புகுத்தப்படுகிறது. இச்செயலின் விளைவாக ஹிட்லரைப்போன்ற மாவீரரைப் படைப்பதுவே நோக்கம். இது பற்றிய நாவல் பரபரப்பாக விற்பனையானது மட்டுமன்றி விரும்பத்தகாத இன்னொரு விளைவையும் ஏற்படுத்தியுள்ளது. கலிபோர்னிய நகரத்தில் ராபர்ட் கிரகாம் எனும் வாணிகர் (74) விந்து

நிலையம் ஒன்று நிறுவியுள்ளார். நோபெல் பரிசு பெற்றோர், உலகப் புகழ்பெற்ற அறிஞர்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோரின் விந்து அங்கு சேமித்து வைக்கப்பட்டு காலப்போக்கில் மிகச்சிறந்த ஆண் மக்களைப் பெற வழி செய்வதுதான் அதன் குறிக்கோள்.

ஆண்-பெண் உடலுறவு மட்டுமே குழந்தையின் பிறப்பிற்கு காரணம் அல்ல. குழந்தை பிறப்பதாக இருந்தாலும், அது ஆணு பெண்ணு என்பதை பெற்றோர் நிச்சயிக்க முடிவதில்லை எனவே தான் குழந்தைப் பேற்றினைத் தெய்வத்தின் அருளாகக் கருதுகின்ற மரபு நம்மிடையே உள்ளது. நமது பண்டைய இலக்கியங்களும் காதல், உடலுறவு போன்றவற்றை அகப்பொருளாகப் பிரித்து அதற்கென்று முறையும் ஒழுங்கும் வகுத்தார்கள். மானுட உடலுறவை வெறும் விலங்கினத்தின் கீழ்த்தர உணர்ச்சி அளவிற்குக் கொண்டு வராமல் அதற்கு ஒரு தூய்மையும் புனிதத்தன்மையும் கொடுத்தார்கள். இத்தகு பாரம்பரியம் இல்லாத அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளில் கூட இந்த விந்து சேமிப்பு நிலையம் வியப்பினையும் அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது, அமெரிக்காவில் தனியொரு வணிகரால் நடத்தப்படும் இந்த விபரீதப் பரிசோதனைக்கு விரைவில் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று நம்புகிறோம்.

காஞ்சியில் பெரியார் சிலை

சமுதாய மறுமலர்ச்சிக்கென்று ஏறத்தாழ முப்பதாண்டுகளுக்கு மேலாக இடையறாது பணி புரிந்தவர் தந்தை பெரியார். மூடப்பழக்க வழக்கங்களையும், சாதி சமய வேறுபாடுகளையும் களைந்து எறிவதற்குக் கொஞ்சமும் அஞ்சாமல் பாடுபட்ட பெரியாரின் சிலைகள் தமிழ் நாடெங்கணும் பரவலாகத் திறந்து வைக்கப்படுகின்றன. அண்மைக் காலம்வரை ஆட்சியிலிருந்த அ. தி. மு. க வும் பெரியாரின் நூற்றாண்டு விழாவினை மாவட்டங்கள் தோறும் கொண்டாடியது. ஆயினும் காஞ்சிபுரத்தில் பெரியாரின் சிலையினைத் திறப்பது ஒரு மாபெரும் வழக்காக மாறி மாநில உயர்நீதி மன்றம் வரை சென்றுள்ளது. செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் கழகம் சிலையினை கங்கை கொண்டான் மண்டபத்திற்கு எதிரில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று வாதிடுகிறது. அந்த இடத்தில் சிலை இருப்பதுவும், சிலையின் பீடத்தில் பெரியாரின் கடுமையான மத எதிர்ப்புக் கருத்துகளைப் பொறித்திருப்பதுவும், மத நம்பிக்கை கொண்டோரின் உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்துகிறது என்பது பலருடைய

கருத்தாகும். ஆனால் அரசுத்தரப்பில் இதனை வெளிப்படையாகச் சொல்லவில்லை. சிலையினால் போக்குவரத்துச் சிக்கல் எற்படும் என்று கூறுகிறார்கள். உண்மைக் காரணம் எதுவாயினும், செங்கற்பட்டு மாவட்ட திராவிட கழகத்தினர் இதனை ஒரு பிரச்சினையாகக் கருதாமல், அரசினர் அளிக்க இருக்கும் மாற்று இடத்தில் சிலையினை வைத்துக் கொள்ளலாம் என்பதே எமது கருத்து. மதத்தில் நம்பிக்கை கொண்டோரின் கருத்துகள் தம்மீது புகுத்தப்படுவதை பகுத்தறிவாளர் என்று கூறிக் கொள்ளும் நாத்திகர்கள் எதிர்க்கிறார்கள். அதுபோன்றே நாத்திகக் கருத்துகளைப் பிறர் மீது திணிக்க முயல்வதும் பொருத்த-மற்றதுதானே! பிறருடைய உணர்ச்சிகளையும் நாம் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மதுரை ஆதீனம்

மதுரையிலுள்ள ஞான சம்பந்தர் மடம் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டது. அதன் தலைமைப் பீடத்தை அலங்கரித்த தவத்திரு சோமசுந்தர சுவாமிகள் அண்மையில் இயற்கை எய்தினார்கள். மரணத்துக்குப்பின் மனிதர் நிலை பற்றியும், ஆவி உலகம் குறித்தும் ஆய்வுக் கருத்துகளை வெளியிட்ட சுவாமிகள் இறந்தவர்களோடு பேசுகின்ற முறை பற்றியும் செயல்முறை ஆய்வு நடத்தினார்கள். தமிழ் நாடெங்கணும் சமயச் சொற்பொழிவுகள் செய்து, சைவமும் தமிழும் தழைக்கப் பெரும்பணி புரிந்தார்கள். முகவை மன்னர் பரம்பரையைச் சார்ந்த காசிநாததுரை போன்ற சைவப் பேரன்பர்களைத் தம்பால் அழைத்து அளவளாவிப் பழகுவது சுவாமிகளின் இயல்பாக இருந்தது. ஈழத்தில் வணிகத்தினால் ஈட்டிய தமது பொருளின் பெரும் பகுதியினை ஞானசம்பந்தர் மடத்தின் வளர்ச்சிக்கென்று செலவிட்டார்கள். அவர்களுக்குப் பின்னர் மார்ச்சுத்திங்கள் 22-ஆம் நாள் பீடம் ஏற்றிருக்கின்ற தவத்திரு அருண-கிரிநாத சுவாமிகள் 1975- இல் சமய தீட்சை பெற்றவர்கள். பிரம-தீர்த்தக் கரையில் ஞானப்பால உண்டவர் சம்பந்தர். இன்னிசையால் தமிழ் பரப்பி இறைவனிடமே கைத்தாளம் பெற்றுப் பெரும் பேறு எய்தியவர். அவர் பிறந்த இடம் சீர்காழி. மதுரைக்கு வந்து சைவம் தழைக்கப் பாடுபட்ட இச்செம்மலின் சீர்சான்ற குரல் இன்றும் நம் காதுகளில் ஒலிக்கிறது.

> "பானல்வாய் ஒரு பாலனீங் கிவனென்று நீ பரிவெய்திடேல்!
> ஆனை மாமலை ஆதியாய இடங்களில் பல அல்லல்சேர்
> ஈனர் கட்கு எளியேன் அலேன் திருஆலவாய் அரன் நிற்கவே'

பெற்றோருக்கு ஒரே மகவாய் அவதரித்த அருணகிரிநாத சுவாமிகள் பிறந்ததும் சீர்காழிதான். காழிநகர்க் கவுணியன் பெயரால் இயங்கும் சைவ மடத்தின் தலைமையினை இவர்கள் ஏற்றிருப்பது முற்றிலும் பொருத்தமே. துறவு வாழ்கைக்கு முன்னர் சுவாமிகள் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருந்ததாகச் சொல்லப்படு கிறது. காலஞ்சென்ற சோமசுந்தர சுவாமிகளின் அரிய நூல்களை மீண்டும் பதிப்பிக்கும் பணியினையும் இவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பது நமது விழைவு.

## தமிழ்ப் பேரவைச் செம்மல்கள்

தமிழ் மொழிக்குத் தொண்டு செய்வோர் இருவரை ஆண்டு தோறும் தேர்ந்தெடுத்து, 'தமிழ்ச் செம்மல்' என்ற பட்டமும் கொடுத்து பணமுடிப்பும் ஈந்து பாராட்டுகின்ற நற்பணியினை மதுரைப் பல்கலைக் கழகம் கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செய்து வருகிறது. இந்த ஆண்டு மார்ச் 29-ஆம் நாளன்று பாராட்டப்படுகின்ற அறிஞர்கள் மயிலை சீனி வேங்கடசாமியும், அவ்வை. துரைசாமி பிள்ளையும் தமிழலகு அறிந்தவர்கள். கிறித்தவமும், தமிழும், சமணமும் தமிழும் பௌத்தமும் தமிழும் போன்ற எண்ணற்ற நூல்களை எழுதிய சீனி வேங்கடசாமி அவர்கள் எண்பது வயது நிரம்பிய தொண்டு கிழவர் ஆரம்பப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய இத்தமிழ்ப் பெருமகனாரின் ஆய்வு நூல்கள் பல்கலைக்கழங்களில் பாடமாக வைக்கப் படுகின்றன. ஈடிணையற்ற அவரது உழைப்பும், தமிழ் ஆர்வமும் ஆசிரியர் உலகம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களாகும். திரு. அவ்வை துரைசாமி பிள்ளை மதுரையில் இருக்கும் ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர். நாவலர் ந. மு வேங்கடசாமி நாட்டாரிடமும், காந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையிடத்தும் முறையாகத் தமிழ் பயின்றவர்.

## கிராமத் தலைவருக்கு பாராட்டு

கிராமங்களே இந்நாட்டின் முதுகெலும்பு என்று சொன்னார் காந்தி அடிகள். நாட்டு நலன் கிராமங்களின் வளர்ச்சியில்தான் அடங்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. அங்கு வாழும் உழவர்கள் படுத்தால் உலகம் படுத்து விடும். எனவேதான்

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை''

என்று சொன்னார் வள்ளுவர் பெருந்தகை. இற்றை நாட்களில் உழவர் பெருங்குடி மக்களிடையில் நல்ல விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. தங்களுக்குப் பாதகமான எச்செயல் எத்திக்கிலிருந்து வந்தாலும், அதனை எதிர்த்துப் போராடும் ஆற்றல் பெற்றுத் திகழ்கிறார்கள். இவர்களுக்கும் அரசினருக்கும் இடையில் இணைப்புப் பாலமாகச் செயல்படுவது மிகவும் சிக்கலான காரியம். ஆண்டு தோறும் நிலவரியினைப்பெற்று உரிய காலத்தில் அரசினருக்கும் செலுத்தி வருவாய்த் துறைக்கு தொண்டுபுரிவதும், கிராம நலன்களைப் பாதுகாப்பதும் ஒருசாதனைதான். இத்தகு அரிய செயலை முப்பதாண்டுகளுக்கு மேலாகத் திறம்படச் செய்தமையினால் மாநில விருதுபெற்ற ஒருவர் நமது பாராட்டுகளுக்கும், வாழ்த்துகளுக்கும் உரியவராகிறார். பழனிக்கு அருகில் பாலசமுத்திரம் பழனியாண்டி மணியகாரர் தமிழக அரசினால் பாராட்டப்பட்டதைச் சிறப்பிக்கும் முறையில் பழனியிலும், பாலசமுத்திரத்திலும், ராஜபாளையத்திலும் கூட்டங்கள் நடத்தி அவர்களுக்கு நேரில் பலர் வாழ்த்துரை வழங்கியிருக்கின்றனர். மாநில காவல் துறை அதிகாரி பொன் பரமகுரு' உர்நீதி மன்ற நீதிபதி மோகன் ஆகியோர் பாராட்டியோரில் குறிப்பிடத்தகுந்தோர். தமிழகம் முழுதும் உள்ள கிராம அதிகாரிகள் உயர்திரு. பழனியாண்டி மணியகாரர் அவர்களை ஒரு இலக்கணமாகக் கொள்ளவேண்டும் என்பது நமது விழைவு. ஓய்வு பெற்ற இக்கிராம அலுவலர் தம் அரிய பணியினை அவர் தம் ஒரே செல்வர் ஜெயகுமார் தொடர்ந்து நடத்தி விடுகிறார். 'மகனறிவு தந்தையறிவு' என்ற முதுமொழியினை மெய்ப்பிக்கும் முறையில் அவர்களும் செயலாற்ற வேண்டும்.

மணியம் பிரஸ்,
44-B, வெங்கடபதி அய்யங்கார் தெரு
மதுரை-9.